# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2030 மார்கழி 05 திங்கட்கிழமை (20-12-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 20


# இரு குண்டுவெடிப்புகளுமே தற்கொலைத் தாக்குதல்களாம்!

## இரண்டு இடங்களிலுமே தலைகள் மீட்கப்பட்டுள்ளன

கொழும்பு, டிசெம்பர்.20

**கொழும்பு நகர மண்டப வளவில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரசாரக் கூட்டத்திலும், ஜா-எலவில் ஐக்கிய தேசியக் கட்சி பிரசாரக் கூட்டத்திலும் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற பெரும் குண்டுவெடிப்புகள் இரண்டும் தற்கொலைத் தாக்குதல் நபர்களால் நடத்தப்பட்டவையே என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.**

**இரண்டு இடங்களிலும் இத் தாக்குதல்களை நடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் நபர்களின் தலைகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிப் பிரசாரக் கூட்டக் குண்டுவெடிப்பின் பின்னர் அப்பகுதியில் இருந்து மீட்கப்பட்ட பெண்ணின் தலை, கொழும்பு மாநகர சபையின் சுத்திகரிப்புத் தொழிலாளி ஒருவருடையது எனக் கூறப்படுகின்றது. இந்தப் பெண் மூன்று மாதங்களுக்கு முன்னர்தான் பணியில் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பெண் எந்த இனத்தைச் சேர்ந்தவர் என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.

ஐ.தே.கட்சி பிரசாரக்கூட்டத்தில் மேடைக்கு அருகே இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தின் பின் மேடையின் கூரைக்குமேல் இருந்து ஆண் ஒருவரின் தலை மீட்கப்பட்டது. அது ஜா-எல வாசியினுடையது எனப் பின்னர் அடையாளம் காணப்பட்டது.

பொதுவாக தமது வயிற்றில் அல்லது முண்டத்தில் குண்டைக் கட்டி வைத்துக்கொண்டு வெடிக்கவைப்போரின் உடலில் தலையையும் காலையும் தவிர ஏனைய பாகங்கள் மிஞ்சுவதில்லை என்றும் -

அந்த வகையில் மேற்படி இரு குண்டுவெடிப்புச் சம்பவ பிரதேசங்களிலும் குண்டுவெடிப்பின் பின்னர் மீட்கப்பட்ட தலைகள் தற்கொலைத் தாக்குதல் நபர்களினுடையனவே எனப் பொலீஸார் நம்புகின்றனர் என்றும் -

சில செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இரு குண்டுவெடிப்புக்களுமே தற்கொலைத் தாக்குதல்களே என்று அரசுத் தரப்பில் கூறப்பட்ட போதிலும் -

ஜா-எலக் குண்டு வெடிப்புக்கு ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினரே காரணம் என்று ஐ.தே.கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

இத்தாக்குதலுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இல்லை என்றும் -

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினரே கூட்டத்தின் மீது கிரனேட் வீசியுள்ளனர் என்றும் -

ஐ.தே.கட்சி கூறியிருக்கின்றது.

## சந்திரிகாவுக்கு கண்ணில் 2 மணிநேர சத்திரசிகிச்சை

கொழும்பு,டிசெ.20

குண்டுவெடிப்பில் முகத்திலும் ஒரு கண்ணிலும் காயத்துக்குள்ளான ஜனாதிபதி சந்திரிகா நேற்று இரு மணிநேரம் சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்டார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நவலோகா தனியார் வைத்திய சாலையில் இடம்பெற்ற இந்த சத்திர சிகிச்சைக்குப் பின்னர் ஜனாதிபதி தேறியுள்ளார் என்றும் -

அவர் தமது வழமையான பணிகளை மேற்கொள்கின்றார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை தொடர்பான வைத்திய அறிக்கை விரைவில் செய்தி ஊடகங்களுக்கு வழங்கப்படும் என்று அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி விடுத்த செய்தி நேற்றிரவு அவரது குரலிலேயே அரச செய்தி ஊடகங்களில் ஒலிபரப்பப்பட்டது.

இந்த உரையில் மேற்படி குண்டு வெடிப்புக்கு புலிகளை குற்றஞ்சாட்டி, புலிகளின் போக்கைக் கடுமையான சொற்பிரயோகங்கள் மூலம் அவர் கண்டித்தார்.

### குண்டுவெடிப்புக் குறித்து

## தலா மூன்று டி.ஐ.ஜிக்கள் விசாரணை நடத்துவர்

நேற்றுமுன்தினம் பொ.ஐ.மு., ஐ.தே.க. பிரசாரக் கூட்டங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு தலா மூன்று பிரதிப் பொலீஸ்மா அதிபர்களைக் கொண்ட உயர்மட்டப் பொலீஸ் குழு ஒன்றை ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் பொலீஸ்மா அதிபர் நியமித்துள்ளார்.

பொ.ஐ.மு. பிரசாரக்கூட்ட குண்டு வெடிப்பை விசாரிக்க டி.ஐ.ஜி இந்திர டி சில்வா தலைமையில் டி.ஐ.ஜிக்கள் ஜயதிஸ்ஸ ஹேரத், ஆர்.ஏ.எம்.கருணசேன ஆகியோரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மற்றைய சம்பவத்தை விசாரிக்க டி.ஐ.ஜி பி.கே.ஸி.பெரேரா தலைமையில் டி.ஐ.ஜிக்கள் என்.கே.இலங்கைக்கோன், கமிலஸ் அபே குணவர்த்தன ஆகியோரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு குழுக்களும் தமது அறிக்கைகளை அடுத்த வியாழக்கிழமைக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளன. (உ)

## பலியானோர் எண்ணிக்கை நேற்றிரவு 41 ஆக உயர்ந்தது

கொழும்பு நகர மண்டப வளாகம் மற்றும் ஜா-எல ஆகிய இடங்களில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த குண்டு வெடிப்புச் சம்பவங்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 41 ஆக உயர்ந்துள்ளது.

நகர மண்டப முன்றலில் இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 27 ஆகவும் -

ஜா-எல சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 14 ஆகவும் - உயர்ந்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

நகர மண்டப குண்டுவெடிப்பில் 112 பேர் காயமடைந்தனர்.

ஜா-எலவில் காயமடைந்த 40 பேர் றாகம ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-க-3-7)

## தற்காலிக ஜனாதிபதி செயலகம் நவலோகா ஆஸ்பத்திரியில்!

கொழும்பு,டிசெ.20

குண்டுவெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கொழும்பு நவலோகா தனியார் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சைபெற்று வருகின்றார்.

அவர் நேற்றுமுன்தினம் இரவு சிகிச்சைக்குப் பின்னர் பின்னிரவில் அலரிமாளிகைக்குத் திரும்பினார் என்று நேற்று வெளியான செய்தி தவறாகும்.

ஜனாதிபதி சிகிச்சைபெறும் வைத்தியசாலையில் தற்காலிக ஜனாதிபதி செயலகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமாலை அவர் அந்தச் செயலகத்தில் இருந்தவாறே பணிபுரிந்தார் என்றும் -

பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடி தனது பணிகளை மேற்கொண்டார் என்றும் - அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (உ-3-7)

## ஆஸ்பத்திரிக்கு பலத்த பாதுகாப்பு

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சிகிச்சை பெற்றுவரும் கொம்பனித் தெரு நவலோகா தனியார் வைத்திய சாலையைச் சுற்றி கடும் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

அந்த வைத்தியசாலை அமைந்துள்ள பகுதிக்கு எவரும் செல்ல முடியாதவாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் -

வெளிநோயாளர் எவரும் சிகிச்சைக்கு அனுமதிக்கப்படவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது.

அந்தப்பகுதியில் விசேட காவலரண்கள் அமைக்கப்பட்டு அவற்றில் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். சில பாதைகளும் அந்தப்பகுதியில் மூடப்பட்டுள்ளன.

கொழும்பில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (உ-3)

## பீரிஸுக்கு மீள சத்திரசிகிச்சை

குண்டுத் தாக்குதலில் கையிலும் நெஞ்சிலும் காயமடைந்த அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுக்கு இரண்டாவது தடவையாக நேற்று சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவுடன் அவருக்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்டது என்றும் -

நேற்றுக்காலை இரண்டாவது தடவையாகவும் அவர் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் - வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரத்ன நேற்று வீடு திரும்பினார் என்றும் -

அமைச்சர் அலவி தொடர்ந்து சிகிச்சை பெறுகிறார் என்றும் -

வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-க-3)

## ஜனாதிபதித் தேர்தல் திட்டமிட்டபடி நாளை!

### அமைச்சரவை நேற்று முடிவு

ஜனாதிபதி வேட்பாளரான சந்திரிகா குமாரதுங்கவை இலக்கு வைத்துக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட போதும் திட்டமிட்டபடி ஜனாதிபதித் தேர்தலை நாளை நடத்துவதென்று அமைச்சரவை நேற்று முடிவுசெய்தது.

தற்காலிக தலைவரான அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் அமைச்சரவை கூடிய சமயம் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் ஜனாதிபதி மீதான தாக்குதல் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

அதே நேரம் - திட்டமிட்டபடி தேர்தல் நடத்தப்படும் என்றும் -

சகல தெரிவத்தாட்சி அதிகாரிகளையும் குறிப்பிட்ட நேரத்தில் சமுகமளிக்கும்படியும் - தேர்தல் ஆணையாளர் கேட்டுள்ளார். (உ-க-3)

## ஆனையிறவுக் காவலரண்கள் மீது புலிகள் பெரும் பீரங்கித் தாக்குதல்

கொழும்பு,டிசெ.20

ஆனையிறவுப் பிரதேசத்தின் முன்னணிக் காவலரண்கள் மீது நேற்றுக் காலை 6 மணிமுதல் புலிகள் பெரும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலை படையினர் முறியடித்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள கிளாலி தளத்துக்குள் ஊடுருவ முயன்ற கடற்புலிகளின் தாக்குதல்கள் கடற்படையினரின் உதவியுடன் முறியடிக்கப்பட்டன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஐந்து தினங்களாக பரந்தன், வெற்றிலைக்கேணி, கிளாலி ஆகிய முன்னணி நிலைகளை மீறுவதற்கு புலிகள் முயற்சிசெய்து வருவதாகவும் பாதுகாப்பு அமைச்சுத் தரப்பில் கூறப்பட்டது. (உ-3-7)

## துளிச்செய்திகள்

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை 9 மணிக்கு நீக்கப்பட்டது. (உ-க-3)

* * *

கொழும்பு நகரசபைக் கூட்டத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் வீடியோ படம் பிடிக்கச்சென்ற இரு படப்பிடிப்பாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தைச் சேர்ந்த அருணபிரியந்த கூரே, எம்.ரி.வி.நிறுவனத்தைச் சேர்ந்த இந்திகா பத்தினிவாசம் ஆகிய படப்பிடிப்பாளர்களே உயிரிழந்துள்ளனர்.

இந்தக் குண்டுவெடிப்பில் எம்.ரி.வி, ரூபவாஹினி ஆகியவற்றின் படப்பிடிப்பாளர்கள் காயம் அடைந்துள்ளனர்.

* * *

குண்டுவெடித்த கொழும்பு நகர மண்டப வளாகத்தில் இரசாயனப் பகுப்பாய்வுப் பணிகள் நேற்று இடம்பெற்றன. (உ-3)

* * *

கொழும்பில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலை அடுத்து தமிழ் நாட்டின் கரையோரப் பகுதிகளான தஞ்சாவூர், திருவாரூர், நாகபட்டினம் மாவட்டங்களில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக இந்திய வானொலி அறிவித்தது.

பூம்புகார், வேதாரணியம், நாகபட்டினம், முத்துப்பேட்டை, கோடிக்கரை, மல்லிபட்டினம் ஆகியவற்றில் ஆயுதம் தாங்கிய பொலீஸார் காவலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வாகனங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

* * *

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஆதரவான துண்டுப்பிரசுரங்களுடன் நல்லூர், கல்வியங்காட்டுப் பகுதியில் நடமாடிய ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள் மீது முடமாவடிப் பகுதியில் வைத்து கிரனேட் வீசப்பட்டது.

இதனால் அவர்களுடன் சென்றிருந்த செல்வராசா கோகுலன்(வயது 26-அரியாலை) என்பவர் காயமடைந்தார். அவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அவர்கள் சென்ற வாகனம் சேதத்துக்குள்ளானது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இரத்தினம்மா கனகசபை

நல்லூர் செட்டித்தெருவில் வசித்தவரும் 29, முருகேசர் லேனில் தற்காலிகமாக வசித்தவருமான திருமதி இரத்தினம்மா கனகசபை 19-12-99 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவமணி (பேபி), சிவசோதி (கனடா), சிவலிங்கம் (கனடா), சிவசூரியர் (சூரியர் — கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும் சி. சற்குணமலர் (கனடா) ஆகியோரின் மாமியாரும் யசோ (கனடா), ராஜி (கனடா), பாலன் (கனடா), கண்ணன் (கனடா), இந்திரன் (கனடா), ருத்திரன் (கனடா), ரதி (கனடா), சத்தியன் (கனடா), லக்ஷ்மி (கனடா), கிரிசாந் (கனடா), பிரபாகரன் (பாலா — கனடா), நிரஜா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20-12-99) பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நவரட்ணம் பத்மாவதி

29, முருகேசர் லேன்,
நல்லூர்

(71909)

## திருமதி லில்லி அருள்பிரகாசம

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் பம்பலப்பிட்டியில் வசித்தவருமான திருமதி லில்லி அருள்பிரகாசம் நேற்று (19-12-99) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருள்பிரகாசத்தின் (இளைப்பாறிய அதிபர்) அன்பு மனைவியும் அருள் லில்லிநாயகம், திருமதி ஜெயசிங்கம், பாலசிங்கம், கீர்த்திசிங்கம், ஜெயசிங்கம், குலசிங்கம், தனசிங்கம், திருமதி சூரியகுமாரி, தேவேந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் இந்திரா, ஜெயசிங்கம், சாந்தி, காலஞ்சென்ற டெய்சி, தேவி, ராஜேஸ், வேஜினி, சாள்ஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் மயூரன், ஜோய், சுலக்ஷனா, டினேஷ், டுஷி, ஸ்மைலி, கோபி, பேபி, சுபோ, சுஜித், சுஜா, சுகி, மனோஜ், வினோஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருள்லில்லிநாயகம்
(மகன்)

புதிய அந்தோனியார்வீதி,
பண்டத்தரிப்பு.

(71906)

## திருவாசக முற்றோதல்

நல்லூர் நல்லைநாயகி சமேத ஸ்ரீசட்டநாத சுவாமி தேவாலயத்தில் ஆலய பரிபாலன சபையினரும் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரும் இணைந்து இன்று காலை 9-30 மணி முதல் திருவாசக முற்றோதல் நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர்.

(உ-க-3)

**ராஜா**
யாழ்ப்பாணம்
விஜய் - ஷாலினி
மற்றும் பலர் நடித்த
**காதலுக்கு மரியாதை**
10-30, 2-30.
(இ/10224)

**லிபேட்டி** அச்சுவேலி
இன்று மட்டும்
பிரபுதேவா, சிம்ரன்
★ **டைம்**
காட்சிகள்: 10-30, 2-30
T.P.No.070-212223
070-212678
நாளை செவ்வாய் மட்டும் படக்காட்சி காண்பிக்கப் படமாட்டாது
(71907)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
ரஜனி ரோஜா
நடித்த
**உழைப்பாளி**
காட்சிகள்:
11-00, 2-30,
(புதிய நேரம்)
(71888)

## வாழ்வகத்துக்கு நிதி உதவி

மானிப்பாயில் இயங்கி வரும் 'வாழ்வகம்' விழிப்புலன் இழந்தோர் இல்லத்தின் கட்டட நிதிக்கு பிரான்பற்று பெரியவளவு முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபை 15 ஆயிரம் ரூபாவையும், பிரான்பற்று சூரிய வைரவர் ஆலய நிர்வாகத்தினர் 10 ஆயிரம் ரூபாவையும் அன்பளிப்பு செய்துள்ளனர்.

பிரான்பற்று மாதர் சங்கத்தினால் கடந்த வாரம் பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட உடல் வலுவிழந்தோர் தின விழாவில் வாழ்வகத்தின் பொறுப்பாளர் செல்வி அ. சின்னத்தம்பியிடம் இதற்கான நிதி கையளிக்கப்பட்டது. [ஐ-135]

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவியான
செல்வி சி. கிருஷாந்தி அவர்களின்
தந்தையார்
**சிவசுப்பிரமணியம் சிவகுமார்**
அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இறுதி வருட [B] பிரிவு
வர்த்தகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

(71910)

## மரண அறிவித்தல்

### திருமதி திருநாவுக்கரசு கனகாம்பிகை

யாழ். கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி திருநாவுக்கரசு கனகாம்பிகை 19-12-99 அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும், யோகேஸ்வரி (கனடா), சந்தானலட்சுமி (கொழும்பு), தவமணி (கனடா), புஸ்பராணி (கொழும்பு), தேவராசா (மன்னார்), தியாகராசா (ஜெர்மனி), லீலாவதி, வசந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இரத்தினசபாபதி, சண்முகநாதன் மற்றும் அருளானந்தன் (கனடா), ஆரோக்கியநாதன் (கொழும்பு), இராசமலர் (மன்னார்), இரஞ்சா (ஜெர்மனி), ஆனந்தராசா (N.S.A எலக்ரோனிக் யாழ்ப்பாணம்), ஜெகன் (பாஷையூர் வர்த்தகர்) ஆகியோரின் அன்பு மாமியும். காலஞ்சென்ற பாலசிங்கம், சின்னராசாவின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. ஜெகதீஸ்வரன்
ச. ஆனந்தராசா
(மருமக்கள்)

இல: 5, புது வீதி,
கொய்யாத்தோட்டம்.

(71912)

# தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு வேண்டுகோள்!

- பதவிக்கு வருவதற்காக இனவாதத்தைப் பேசிய பெரும்பான்மை இன அரசியல் கட்சிகள் மத்தியில் இனப் பிரச்சினைக்கான தீர்வை முன்வைத்து மாற்றத்தை ஏற்படுத்தியவர் என்பதால் —
- குறுகிய இனவாதப் போக்கில் அல்லாமல் ஓர் அறிவு ஜீவியாக, ஒரு சமாதான விரும்பியாக பிரச்சினைகளை அணுகுபவராக ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் செயற்பட்டு வந்துள்ளமையால் —
- இடதுசாரிகள் மலையக மக்களின் பிரதிநிதிகள், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் எனப் பல்லினங்களையும் இணைத்து ஒரு பன்முகத் தன்மையை பொதுஜன ஐக்கிய முன்னணி பிரதிநிதித்துவப்படுத்துவதால் --
- இந்த ஜனாதிபதித் தேர்தலில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான மக்கள் ஆணையைக் கோரி நிற்பதால் --
- எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சந்திரிகா அவர்களை ஆதரிப்பதே தமிழ் மக்களின் நீண்டகால நலன்களைத் தொடர்புபடுத்திப் பார்க்கையில் பொருத்தமானதும் தர்க்க பூர்வமானதும் நியாயமானதும் ஆகும்.






ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
( ஈ. பி. ஆர். எல். எவ் ) யாழ்ப்பாணப் பிரிவு

(21913)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டணி அரசு பிளவுபட்டது

# இத்தாலி பிரதமர் ராஜினாமா!

றோம், டிசெ. 20

இத்தாலியப் பிரதமர் மசிமா ஜி.எலேமா திடீரென நேற்றுத்தமது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

ஜானாதிபதியிடம் தனது இராஜினாமாக் கடிதத்தை அவர் நேற்று காலை வழங்கினார். புதிய அரசு ஒன்று அமைக்கப்படும் வரை காபந்துப் பிரதமராகஇருக்குமாறு ஜனாதிபதி அவரிடம் கேட்டுக் கொண்டார்.

ஆட்சியில் உள்ள கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு இடையில் ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளை அடுத்தே பிரதமர் தனது பதவியை இராஜினாமாச் செய்தார்.

எதிர்வரும் கிறிஸ்மஸுக்குள் புதிய வலுவான அரசு ஒன்றை அமைப்பதற்கு ஏதுவாகவே தான் பதவியை இராஜினாமாச் செய்ததாக பிரதமர் தெரிவித்தார். எனினும் இத்தாலிய அரசியலில் சிறிய கட்சிகள் அதிக செல்வாக்குசெலுத்திவரும் வேளையில் பிரதமரின் கூற்று சாத்தியப் பாடானதாக இருக்காது என்று அவதானிகள் தெரிவித்தனர்.

பிரதமரின் இராஜினாமாவை அடுத்து இத்தாலியில் உலகப் போரின் பின்னர் பதவியேற்ற 56 ஆவது அரசு தற்போது ஆட்டம் கண்டுள்ளது. இந்த அரசு 14 மாதங்கள் மட்டுமே பதவியில் இருந்தது (ஐ-6-8)

## ரஷ்யாவில் வாக்களிப்பு

மொஸ்கோ, டிசெ 20

ரஷ்ய நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு நேற்று ஆரம்பமானது. மக்கள் தொகை குறைந்த தூர கிழக்குப் பகுதிகளில் நேற்றுக் காலை வாக்களிப்பு ஆரம்பித்ததாக மொஸ்கோவில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தேர்தலில் கொம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ரஷ்ய ஜனாதிபதி ஜெல்ட்சினின் ஆதரவு பெற்ற ஐக்கிய கட்சிக்கும் மற்றும் ஒரு கட்சிக்கும் இடையில் கடும் போட்டி நிலவுகின்றது. (ஐ-6-8)

## சூரிய குடும்பத்துக்கு வெளியே புதிய கிரகங்கள் கண்டுபிடிப்பு

வாஷிங்டன், டிசெ. 20

சூரிய குடும்பத்துக்கு வெளியே புதிதாக 6 கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே சூரியமண்டலத்துக்கு வெளியே உள்ள 22 கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன, புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள 6 கிரகங்களிலும் ஜதரசன், ஹீலியம் ஆகிய வாயுக்கள் தான் அதிகம் இருக்கின்றன. இந்தக் கிரகங்கள் வியாழனை ஒத்தவையாக உள்ளன என்று கலிபோர்னியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி தெரிவித்தார்.

ஹவாய் தீவில் வைக்கப்பட்டிருந்த 'கெக் — 1' ரக தொலைநோக்கி மூலம் புதிய கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் சில அளவில் பூமியை விட சிறியனவாகவும் சில பெரியனவாகவும் உள்ளன.

இந்தக் கிரகங்களும் சூரியனைப் போன்ற ஒரு நட்சத்திரத்தை சுற்றிவருகின்றன. இவை 65 ஒளி ஆண்டுகள் முதல் 192 ஒளி ஆண்டுகள் வரையான தொலைவில் உள்ளன. (ஐ-7-8)

## சென்னையில் விழ்ந்த எரிகல்

சென்னை, டிசெ. 20

விண்ணில் இருந்து கீழே வீழ்ந்த எரிகல் ஒன்று முதல் தடவையாக தமிழகத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சென்னை நங்க நல்லூர் முவரசன் பேட்டையைச் சேர்ந்தகோதண்டராமனின் மகன் யுகம் [வயது 18] முகம்மது ஆய்பூப் [வயது 11] ஆகியோர் எரிகல் ஒன்று தமது வீட்டுக்கு அருகில் எரிந்தபடி விழுந்ததைக்கண்டனர். அதனைக் கண்டெடுத்த தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மைய செயல் இயக்குநரிடம் கையளித்தனர்.

இந்த எரிகல் கருமை நிறமாக இருந்தது என்றும்— 96.97 கிராம் எடை கொண்டது என்றும்— மக்னீசியம், இரும்பு, ஸிலிக்கேட் ஆகிய கனிமங்கள் அதில் அடங்கி இருந்தன. (ஐ-6)

## பாகிஸ்தானில் இரு தினங்களில் குண்டு வெடிப்பில் 12 பேர் பலி:

இஸ்லாமாபாத், டிசெ. 20

பாகிஸ்தானில் கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் இடம்பெற்ற இரு வெவ்வேறு குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 12 பேர் பலியானதோடு 30 பேர் காயமடைந்தனர்.

வெள்ளியன்று பிற்பகல் பாகிஸ்தான் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரின் இஸ்ஸாம் கட் [கிராமத்தில் பெரும் குண்டு வெடிப்பு இடம்பெற்றது. இதில் 10 பேர் உயிரிழந்தனர்; 23 பேர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் மாலை பாகிஸ்தான்-இந்தியஎல்லைப் பகுதி நகரான செய்கோட்டில் சைக்கிள் குண்டு ஒன்று வெடித்ததில் 2 பேர் உயிரிழந்தனர்; 7 பேர் காயமடைந்தனர். (ஐ-6)

## நவீன எதிர்ப்பு ஏவுகணை இந்தியா பரிசோதிப்பு

புதுடில்லி, டிசெ. 20

இந்தியா குறுந்தூரஏவுகணை எதிர்ப்பு ஏவுகணை ஒன்றை வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.

தரையில் இருந்து தரைக்கும் தரையில் இருந்துவானுக்கும் தாக்கவல்ல இந்த ஏவுகணை கடற்படைக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதாக இந்திய பாதுகாப்பு ஆய்வு மேம்பாட்டுக் கழகம் தெரிவித்தது.

9 கிலோ மீற்றர் தூரம் சென்று தாக்கக் கூடிய இந்த 'ஷெச்சூல்' ஏவுகணை நேற்று முன்தினம் சொச்சினில் உள்ள ஐ. என். எஸ். துரோணாச்சாரி ஏவு தளத்தில் இருந்து வெற்றிகரமாக ஏவிச் சோதிக்கப்பட்டது.

கப்பல்களில் இருந்தும் விமானங்களில் இருந்தும் தாக்கும் ஏவுகணைகளை எதிர்த்துத் தாக்கி அழிக்கும் வகையில் இந்த ஏவுகணை வடிவமைக்கப்பட்டுள்ளது. (ஐ-6-8)


## வாக்காளர் கவனத்திற்கு

- அரசாங்கத்தினால் விநியோகிக்கப்பட்டு வரும் தேர்தல் இடாப்பு பதிவு அட்டைகள் இதுவரை உங்களுக்கு கிடைக்காதிருந்தால் பதற்றமடையாமல் உங்கள் வீட்டிற்கு சமீபமாகவுள்ள வாக்குச் சாவடிக்குச் சென்று உங்களது பெயரையும் குடும்ப விவரங்களையும் தெரியப்படுத்தவும். அங்குள்ள பதிவேட்டில் உங்கள் பெயர் காணப்படின் உங்களை வாக்களிக்க அனுமதிப்பார்கள். கடந்த கால தேர்தல்களில் நீங்கள் வாக்களித்திருந்தால் உங்கள் பெயர் தேர்தல்இடாப்பில் உள்ளதென்பது நிருபணம்.
- வாக்கு மோசடிகள் நடைபெறாமலிருக்க தேர்தல் இடாப்பு பதிவு அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்க நேரகாலத்துடன் வாக்களிக்கச் செல்வது பயனளிக்கும். இல்லையெனில் யாராவது உங்கள் வாக்குகளை துஷ்பிரயோகம் செய்யலாம்.

**Alliance for Justice**

(71813)


## உலக அரங்கில்

## புத்தாயிரமாண்டில் பேரதிசயம் எதுவும் நிகழாது

இரண்டாயிரமாம் ஆண்டில் பேரதிசயம் ஏதும் நிகழாது. அப்படி நிகழும் என்று எதிர்பார்த்திருக்கும் மக்கள் காலத்தை வீணடிக்கிறார்கள் என்று திபெத்திய பௌத்தமதத் தலைவர் தலாய்லாமா கூறி உள்ளார்.

தென்னாபிரிக்காவின் கேப்டவுணில் நடைபெற்ற உலக சமயத் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட பின்னர் கிர்ஸ்டன் பேர்ச் பூங்காவில் சுமார் 5 ஆயிரம் பொது மக்கள் மத்தியில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார். (ஐ-6-8)


## பங்களாதேஷில் ஹர்த்தால் வன்முறை

பங்களாதேஷில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஹர்த்தாலை அடுத்து தலைநகரில் இடம்பெற்ற வன்முறைகளில் பல வாகனங்கள் சேதமாக்கப்பட்டன; 25பேர் காயமடைந்தனர்

பங்களாதேஷ் தேசியவாதக் கட்சியின் மாணவர் பிரிவு இந்த ஹர்த்தாலை ஏற்பாடுசெய்திருந்தது. (ஐ-6)

## அமெரிக்கா கோரிக்கை

செச்சினியா மீதான ரஷ்யத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறு அமெரிக்காவும் மற்றைய மேற்கு நாடுகளும் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளன. எனினும் ரஷ்யா இந்தக் கோரிக்கையை மறுத்துள்ளது தொடர்ந்தும் செச்சினியா மீது தீவிரத் தாக்குதல்களை நடத்தி வருகின்றது. ஐ-6-8




முன்னாள் உத்தரப் பிரதேச முதல்வர் கல்யாண்சிங் புதிய கட்சி அமைப்பதாகக் கூறிவருகிறார்.

## மெக்காவ் பிரதேசம் சீனாவிடம் கையளிப்பு

பீஜிங் டிசெ. 20

போர்த்துக்கல் குடியேற்றப் பகுதியாக இருந்த மெக்காவ் பிரதேசம் நேற்று மீண்டும் சீனாவிடம் உத்தியோக பூர்வமாக ஒப்படைக்கப்பட்டது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ நிகழ்வு தலைநகர் பீஜிங்கில் சம்பிரதாய பூர்வமாக இடம்பெற்றது. பல நாட்டுப் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 1997 இல் பிரிட்டனின் காலனித்துவ நாடாக இருந்த ஹொங்ஹொங் சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் இரண்டாவதாக சீனாவுடன் இணையும் பிரதேசமாக மெக்காவ் விளங்குகின்றது. (ஐ-6-8)

## குறோஸ்னிக்கு தெற்கே மற்றொரு பிரதேசம் ரஷ்யப்படை வசம்

மொஸ்கோ, டிசெ. 20

செச்சினியாவின் தலைநகர் குறோஸ்னிக்கு தெற்கேஉள்ள செரினோர்சிரியா என்ற மாவட்டத்தைத்தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளதாக ரஷ்யப் படையினர் அறிவித்துள்ளனர்.

இந்த மாவட்டத்துக்குள் ரஷ்யப் படைகள் நுழையும் போது தீவிரவாதிகளிடம் இருந்து எந்தவித எதிர்ப்பும் இருக்கவில்லை என்று மொஸ்கோவில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேசமயம் —

தலைநகர் குறோஸ்னிக்கு அருகே உள்ள மலைப் பகுதிகளில் மறைந்திருக்கும் தீவிரவாதிகள் மீதும் ரஷ்யப்படையினர் கடும் ஆட்லறித் தாக்குதல்களையும் விமானக் குண்டுத் தாக்குதலையும் நடத்தி வருகின்றனர்.

இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் குறோஸ்னியில் இயல்பு நிலை திரும்பி விடும என்று ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புடின் தெரிவித்தார் (ஐ-6-8)

## சில இந்திய நிறுவனங்களின் மீது அமெரிக்கத் தடை தளர்வு

இந்தியா கடந்தஆண்டு மே மாதம் அணு வெடிப்புப் பரிசோதனை நடத்தியதை அடுத்து அந்த நாட்டின் மீது அமெரிக்கா விதித்திருந்த பொருளாதாரத் தடைகள் சிறிதளவில் தளர்த்தப்பட்டுள்ளன

54 இந்திய நிறுவனங்களுக்கு எதிரான தடைகள் தற்போது அகற்றப்பட்டுள்ளன. இராணுவ ஆயுதத் தொழிற்சாலைகளும் அறிவியல் கழகங்களும் பொருளாதாரத் தடைகள் அகற்றப் பட்ட நிறுவனங்களில் அடக்கம்

இதன் மூலம் அமெரிக்காவில் இருந்து பொருள்களையும், தொழில் நுட்பங்களையும் இந்த நிறுவனங்கள் இறக்குமதி செய்ய முடியும்.

அதே சமயம்—

மேலும் 149 நிறுவனங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகள் அகற்றப்படவில்லை அணு ஆயுதப் பரவலோடு நேரடித் தொடர்பு உள்ள நிறுவனங்கள் மீது நேரடிக் கண்காணிப்புச்செலுத்துவதற்காகச் சில நிறுவனங்கள் மீதான தடைகள் அகற்றப்படவுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது (ஐ-6 8)


தீ

8 ?

(சி/10183)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 90-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் சின்னத்தம்பி கந்தசாமி

மண்ணகம் 04 - 09 - 1947 விண்ணகம் 23 - 09 - 1999

அன்புத் தெய்வம் ஐயாவே!
உங்களை ஐயா என்றழைத்து
தொண்ணூறு நாளானதோ — இல்லை
மனம் நித்தமும் ஐயா என்றழைக்கின்றது.
என்றென்றும் உங்கள் அழகு உருவம்
மனத்திரையில் ஓடிக்கொண்டிருக்கும்.

இன்று (20-12-1999) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

G. S. லேன், எருவன்,
கொடிகாமம். (71808)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



### திருமதி ஆனந்தராசா ராஜமதி (வவி)

மண்ணில் 21-07-1960 சிவப்பேறு 21-11-1999

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் வேலணை சாட்டி வெள்ளைக் கடற்கரையில் 20-12-99 இலும் சபிண்டீகரணம் 23-12-99 இல் அன்னாரின் இல்லத்திலும் நிகழவிருப்பதால் மேற்படி வைபவங்களில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

கணவர் ந. ஆனந்தராசா
(கிளை முகாமையாளர்
ப.நோ.கூ. சங்கம்,
ஊர்காவற்றுறை)

பாலைக்காட்டுச் சந்தி,
ஒழுவில் றோட்,
ஊர்காவற்றுறை. (7181[illegible])

## இசை வழிபாடு

யாழ்ப்பாணம், டிச. 20

நவாலி தென்னிந்தியத் திருச்சபையின் கிறிஸ்துபிறப்பு இசைவழிபாடு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு மேற்படி தேவாலயத்தில் சபைக்குரு அருள் திரு. வீ. இராஜ்குமார் அடிகள் தலைமையில் நடைபெறும்.

இசைவழிபாட்டில் இறை செய்தியை நவாலிப் பங்குத் தந்தை வண. பிதா எஸ். அந்தோனிப்பிள்ளை அடிகளார் வழங்குவார். (க-100-185)

## ச.ச. நிலையத்துக்கு தொலைக்காட்சி

வேலணை பிரதேசசபையினால் நாவலர் சனசமூக நிலையத்திற்குத் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

வேலணை நாவலர் சனசமூக நிலையத்தில் பிரதேச சபைத் தலைவர் ந கருணாகரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் தொலைக்காட்சிப் பெட்டியினை சனசமூக நிலைய நிர்வாகத்தினரிடம் சம்பிரதாயபூர்வமாகக் கையளித்தார்.

இந்நிகழ்வில் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத்தலைவர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-167)

## கதிர்காமத்தில் வன்செயல்

கதிர்காமம் கெப்பிட்டிகந்த சந்நிதியில் நேற்று முன்தினம் நண்பகல் இரு அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையில் நடைபெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்ததுடன் மூவர் காயமடைந்தனர்.

இந்த மோதலில் உயிரிழந்தவர் மற்றும் காயமடைந்தவர்கள் எந்தக் கட்சியின் ஆதரவாளர்கள் என்பது பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை. (ஐ-5)

## தையல் பயிற்சி விரைவில் ஆரம்பம்

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படவிருக்கும் ஒரு வருட தையல் பயிற்சி டிப்ளோமா விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

பயிற்சி பெற விரும்பும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலருக்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-100)


## வைத்தியம்


செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்,
121, 2ஆம்
குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459
([illegible])


## நன்றி நவிலலும் சபிண்டீகரண அழைப்பும்

17 - 11 - 99 அன்று இன்பருட்டிக்கடலில் அகால மரணமடைந்த எமது மகனின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்துகொண்டும் அனுதாபச்செய்திகள் அனுப்பியும் ஆறுதல் கூறியும் எமது துயரில் பங்குபற்றிய மாணவ மணிகள் உட்பட கல்விச்சமூகத்தினர், யாழ். மாவட்ட வங்கி முகாமையாளர் உட்பட வங்கி ஊழியர்கள், ஏனைய திணைக்களங்களைச் சேர்ந்தவர்கள், ஞானசம்பந்தர் கலை மன்றத்தினர், நண்பர்கள், உற்றார், உறவினர்கள், வர்த்தக சமூகத்தினர்கள், விசேடமாக எம் பிள்ளைகளின் உடலங்களை சுழியோடி மீட்டுத்தந்த இன்பருட்டி, சுப்பர்மடம், மயிலிட்டி கடற்றொழிலாளர் சங்கத்தினருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகள்.

மலர்வு 02 — 02 — 1981



உதிர்வு 17 — 11 — 1999


### சிவநாதன் ரவிசங்கர்

20 - 12 - 99 திங்கட்கிழமை காலை 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் மிகவும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

வீ. சி. சிவநாதன்
(தந்தை)

வீரப்பதிராயன்,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி. (71826)

## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி தங்கபூபதி முத்துவேல்

உற்பவம் 08 — 10 — 1960 நற்பதம் 25 — 12 — 1985

திதி: 20 — 12 — 1999

எம் குலத்து குலவிளக்கு பூபதியே!
எமை ஆற்றுவார் யாரம்மா……?

உன் தரிசனத்திற்காக உமது ஞாபகார்த்தமாகக் கட்டிய வீரபத்திரர் கோயில் மண்டபத்தில் தவமிருக்கின்றோம்.

இன்று ஆலயத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பூசையிலும் தொடர்ந்து நடைபெறும் மகேசுவர பூசையிலும் பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி!

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, தம்பி, மைத்துனி,
மாமா, மாமி, பெரியம்மா,
அன்ரி, குடும்பத்தினர்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

'பதிபவனம்'
சந்நிதி றோட்,
உடுப்பிட்டி. (71861)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தேர்தல் கால குண்டு வெடிப்புகள்

ஜனாதிபதித் தேர்தலுக்கான இறுதிப் பிரசார நாளான நேற்று முன்தினம் சனிக்கிழமை, பிரதான வேட்பாளர்கள் இருவரினதும் கூட்டங்களில் குண்டுகள் வெடித்தன.

கொழும்புமாநகரசபைமைதானத்தில் நடைபெற்ற ஆளுங்கட்சியின் இறுதிப் பிரசாரக் கூட்டத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடைபெற்றிருக்கிறது. அந்தச் சம்பவத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மயிரிழையில் உயிர் தப்பினார் — சிறு காயங்களுடன். அமைச்சர்கள் மூவர் படுகாயமுற்றனர். பொலீஸ் உயர் அதிகாரி, பௌத்தபிக்கு ஒருவர் உட்பட பதினைந்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

ஜா- எலவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் வெடித்த குண்டினால் அக்கட்சியின் அமைப்பாளரும் முன்னாள் இராணுவ அதிகாரியுமான ஜெனரல் அல்கம உட்பட பத்துப் பேருக்கும் அதிகமானோர் பலியாகினர்;

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு தென்னிலங்கையில் தேர்தல் வன்செயல்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. கடந்த வெள்ளிக்கிழமை வரை மொத்தம் 95 தேர்தல் வன்செயல்கள் குறித்து முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன.

அனுராதபுரம் மாவட்டம் எப்பாவெலவில் இம்மாதம் 14 ஆம் திகதி நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் குண்டு வெடிப்பு இடம்பெற்றது. அந்தக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கா குண்டு வெடிப்பதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னரே அங்கிருந்து சென்றிருந்தார்.

தேர்தல் பிரசாரஇறுதிநாளில் நடைபெற்ற குண்டுவெடிப்புகள் கொழும்பிலும் தெற்கின் ஏனைய இடங்களிலும் பதற்ற நிலையையும் குழப்ப நிலையையும் தோற்றுவித்தன. அதனால் கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது

இன்றைய நாள் கழிந்ததும் ஜனாதிபதித் தேர்தல். அரசாங்கம் எத்தகைய பாதுகாப்புகளை மேற்கொண்டாலும் தென்னிலங்கையிலும் மக்கள் பதற்றமான சூழ்நிலையிலேயே வாக்களிக்க நேர்ந்துள்ளது.

பிரதான வேட்பாளர்கள் இருவருக்கு இடையில் கடும் போட்டி நிலவுவதால் தேர்தலில் குழப்பங்கள், மோசடிகள், தில்லுமுல்லுகள் நடைபெறும் அபாயம் உண்டென ஏற்கனவே மதிப்பிடப்பட்டிருந்தது. இப்போது இரண்டு குண்டுவெடிப்புகள் நடைபெற்றுள்ளதால் தெற்கில் அமைதியான தேர்தல் என்பது கேள்விக்குரியதாகி உள்ளது.

தேர்தல் ஒன்று, குழப்பங்களுடனும் மோசடிகளுடனும் நடைபெற்றால், அதன் மூலம் தெரிவு செய்யப்படுபவர் உரிய தகுதி பெறமுடியுமா? நேர்மையான, சரியான தேர்தல் ஜனநாயகத்தின் ஆணிவேராகும்.

குண்டு வெடிப்புகள் போன்ற வன்செயல்கள் சரியான நேர்மையான தேர்தலுக்குப் பாதகமானவை — குந்தகம் விளைவிப்பவை. அவற்றைப் புரிவதும் தூண்டிவிடுவதும் ஜனநாயக விரோதமான செயல்கள். இத்தகைய சம்பவங்களைத் தடுப்பதில் போதிய, கூடுதல் கவனம் எடுக்கப்பட்டிருப்பின் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. தேர்தல் குழப்பமின்றி, சுதந்திரமாக நடைபெற பாதுகாப்பும் ஏனைய ஏற்பாடுகளும் செய்யப்பட்டதாக அரசால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அது பிழைத்து விட்டது; பலவீனம் அடைந்தது எனலாம்.

# குடாநாட்டுக்கான மின் விநியோகம் மேலும் மோசமடையும் ஆபத்து!

## 'கூல் எயரின்' 8 ஜெனரேட்டர்களில் நான்கு 'அவுட்'!

யாழ்ப்பாணம், டிசெ. 20

காங்கேசன்துறையில் இயங்கி வரும் 'கூல் எயர்' நிறுவன ஜெனரேட்டர்கள் எட்டில் நான்கு பழுதடைந்து விட்டதால் குடாநாட்டுக்கான மின்விநியோகம் மேலும் மோசமடையும் ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது.

ஒவ்வொன்றும் 1.5 மெகா வாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய எட்டு ஜெனரேட்டர்கள் 'கூல் ஏயர்' நிறுவனத்தினால் காங்கேசனில் பொருத்தப்பட்டுள்ளன இதன்படி இந்த எட்டு ஜெனரேட்டர்களாலும் ஆகக்கூடியது 12 மெகா வாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

இதனடிப்படையில் — குடாநாட்டு மின் விநியோகத்துக்காக] குறைந்தது பத்து மெகா வாட்ஸ் மின்சாரத்தை 'கூல் ஏயர்' நிறுவனம் இலங்கை மின்சார சபைக்கு வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டு அதன் பிரகாரம் இருதரப்பு ஒப்பந்தமும் செய்து கொள்ளப்பட்டது.

அத்தோடு இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்திலும் 3.5 மெகா வாட்ஸ் மின் உற்பத்தி செய்யப்படுவதால் குடாநாட்டில் சுமார் 13 மெகா வாட்ஸ் அளவு பாவனைக்கான மின் விநியோக இணைப்பை மின்சார சபை பாவனையாளர்களுக்கு வழங்கியிருந்தது.

ஆனால் தற்போது 'கூல் எயர்' நிறுவனத்தின் எட்டு ஜெனரேட்டர்களில் நான்கு அடியோடு 'அவுட்' ஆகிவிட்டதாகத் தெரிகின்றது.

இதனால் தற்சமயம் ஆகக்கூடியது 4.5 மெகா வாட்ஸ் மின்சாரத்தை மட்டுமே வழங்கக் கூடிய நிலையில் 'கூல் எயர்' நிறுவனம் இருப்பதாகக் கூறப்படுகின்றது

அத்தோடு சுன்னாகம் மின் உற்பத்தி நிலைய மின்சாரத்தையும் சேர்த்து விநியோகத்துக்குமாக உச்சமாக 7.5 மெகா வாட்ஸ் மின்சாரமே மின்சார சபைக்கு தற்போது கிடைக்கின்றது.

இந்த 7.5 மெகா வாட்ஸ் மின்சாரத்தை வைத்துக் கொண்டு 13 மெகா வாட்ஸ் மின்சாரத் தேவையை எப்படிப் பூர்த்தி செய்வது என்று தெரியாமல் மின்சார சபை அதிகாரிகள் திணறுகின்றார்கள்.

இதனால் முன்னிரவு 6.30 முதல் 9.30 மணி வரை ஒன்று விட்ட ஒரு நாள் தடைப்படும் மின்சாரம் இனிமேல் ஒன்று விட்டு இரண்டு நாள்களுக்கு (வாரத்தில் 3 நாள்களுக்கு) தடைப்படும் என்றும் —

இதற்கு மேலதிகமாக எதிர்பாராத திடீர் திடீர் மின் தடைகளும் அவ்வப் போது ஏற்படும் என்றும் —

மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ)

## பருத்தித்துறை டிப்போவுக்கு புதிய பஸ்

வடமராட்சி, டிசெ. 20

வடபிராந்திய போக்குவரத்துச்சபை பருத்தித்துறை டிப்போவுக்கு சிறியபுதியபஸ் வண்டி ஒன்று வடபிராந்திய போக்குவரத்துச் சபையால் வழங்கப்பட்டுள்ளது.

ஒருவழி கொண்ட இப்புதிய பஸ் வண்டி பருத்தித்துறையிலிருந்து நாகர்கோயிலுக்கு சேவையிலீடுபடுத்தப்படவுள்ளது.

(ஐ-173)

## விற்பனை நிலையங்கள் திறக்கப்படும்

நெல்லியடி, டிசெ. 20

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க அனுசரணையில் சுமார் நான்கு லட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பெற்றஇரண்டு விற்பனை நிலையங்கள் தைப்பொங்கல் தினத்தன்று திறந்து வைக்கப்பட உள்ளன,

ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் கரணவாய் தெற்கிலும் —

2 லட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவில் உடுப்பிட்டி மத்தியிலும் —

இவ் இரு விற்பனை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

(ஐ-109-173)

## மூதூரில் இருந்து தோப்பூருக்கு மக்கள் செல்ல படையினர் தடை

திருகோணமலை மூதூரில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியிலுள்ள மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத தோப்பூர்ப் பகுதிக்கு செல்வதற்கு படையினர் தடை விதித்துள்ளனர்.

கடந்த ஆறு தினங்களாக மூதூரிலிருக்கும் மக்கள் தோப்பூருக்குச் செல்ல அனுமதிக்கப்படாமையினால் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் உணவுப்பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை —

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை எழுதும் மாணவர்களை மட்டுமே மூதூரிலிருந்து வெளியே செல்ல படையினர் அனுமதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-5)

## குடாநாட்டில் மீனுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது

வடமராட்சி, டிசெ 20

யாழ் குடாநாட்டில் மீன் வகைகளுக்குப் பலத்ததட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது

யாழ் கடலேரியில் மீன் பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாலும், வடமராட்சி கிழக்கின் ஒருபகுதியில் சண்டைகள் இடம் பெறுவதாலும், வடமராட்சி வடக்கில் கடும் காற்றினாலும் மீன் பிடித்தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மீன் வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சந்தைகளில் மீன் வியாபாரிகளை அரிதாகவே காணமுடிகிறது.

இதற்கிடையில் —

வடமராட்சி வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் உள்ள கரையோரங்களுக்கு மீன் கொள்வனவுக்காக பெருமளவு சைக்கிள், மோட்டார் சைக்கிள் வியாபாரிகள் தென்மராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிலிருந்து வந்து மீன் வகைகளைப் பெறமுடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

[ஐ-173]

## சில மருந்து வகைகளுக்கு இங்கு பெரும் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ, 20

யாழ் குடாநாட்டில் அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இரத்த அமுத்தம், மனநோய், நீரிழிவு போன்ற நோய்களுக்கான மருந்து வகைகளை நோயாளர்கள் யாழ்.குடாநாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் இருந்து பெற முடியாமல் உள்ளது.

இந்நோய்களுக்கானமருந்து வகைகளை தனியார் கடைகளிலும் பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளது.

இம்மருந்து வகைகளை கொழும்பிலிருந்து தருவிக்க தனியார் வர்த்தகர்கள் ஏற்பாடு செய்துள்ள போதிலும் இன்னமும் கப்பல் இங்கு வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது

(ஐ-173)

# எமது டாக்டர்கள் வெளியேறுவது நோயாளிகளுக்குச்செய்யும்துரோகம்

## மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவிப்பு

நெல்லியடி, டிசெ. 20

"நமது மண்ணில் படித்து, டாக்டர் பட்டம் பெற்றவர்கள், எமது இனத்தை மறந்து இன்று வெளியிடங்களுக்கு பணியாற்றச் செல்வது, நோயாளிகளுக்குச் செய்யும் பெரும் துரோகமாகும்."

இவ்வாறு பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரியாக கடந்த வெள்ளியன்று பதவியேற்ற டாக்டர் கே. மயிலேறும் பெருமாள் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரியாகப் பணியாற்றி வந்த இவர், யாழ். பிராந்திய பிரதி சுகாதாரப் பணிப்பாளரினால் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மந்திகை வைத்தியசாலை மண்டபத்தில் இடம்பெற்ற சம்பிரதாய பூர்வமான வரவேற்புவைபவத்தில் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் மயிலேறும் பெருமாள் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இற்றைக்கு சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் நான் இவ்வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரியாக பணிபுரிந்துள்ளேன். அப்போதைய நேரத்தில் பிரகாசித்த அனைத்து வளங்களும் இன்று வைத்தியசாலையில் மங்கியுள்ளன.

போர்க்கால சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும், நாம் எத்தனையோ இடர்பாடுகளை சமாளிக்க வேண்டி வரும். இந்நிலையில், இவ்வைத்தியசாலையிலுள்ள ஊழியர்கள் அனைவரும், பெரிது, சிறிது என்று பாராது 'ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம்' என்ற பெரும் நோக்கோடு சேவை புரிய வேண்டும்.

இதனை விடுத்து, ஒருவரை ஒருவர் குறை கூறி, முரண்பாடுகளை உருவாக்குவதனால் எதுவித பலனும் கிடைக்கப்போவதில்லை

அத்துடன், வைத்தியசாலையில், சிகிச்சை பெற வரும் நோயாளிகளுடன், அன்பு, கருணை, காட்டி அவர்களை இன்முகத்துடன் வரவேற்க வேண்டும்.

தற்பொழுது மந்திகை மருத்துவமனையில் நான்கு டாக்டர்கள் கடமையிலிருக்கின்ற போதிலும், இங்கு சிகிச்சை சீரின்மையால், அம்புலன்ஸ் மூலம் அவர்கள் வேறு மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றார்கள். காலப்போக்கில் இது தவிர்க்கப்படவேண்டும்.

அத்துடன் ஊழியர்கள் அனைவரும் இவ் வைத்தியசாலையை தமது வீடு போல் எண்ணி செயல்படுவார்களேயானால் 21 ஆம் நூற்றாண்டில் மந்திகை மருத்துவமனை யாழ். போதனா மருத்துவமனையின் தரத்தில் விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

இதே வேளை இங்கு பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் சுகாதாரத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருக்கும் தமக்குரிய சீருடைகளை அணிவதுடன் தம்மை இனம் காட்டும் வகையில் தொழில் அட்டைகளையும் சீருடையில் பொறித்திருக்க வேண்டும். இந்நடைமுறை உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டியது அவசியமாகும் — என்றார்.

டாக்டர்கள், ஊழியர்கள் உட்பட சுமார் நூற்றுக்கு மேற்பட்டோர் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர். வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் க.பாலசுந்தரம் உட்பட இன்னும் பலர் கருத்துரை வழங்கினார்கள்.

(ஐ-109)

## நாளை

மார்கழி 6

செவ்வாய்க்கிழமை

திதி: சதுர்த்தசி

பின்னிரவு 2.37 வரை.

நட்சத்திரம்: ரோகிணி

பின்னிரவு 2.15 வரை.

சுபநேரம்: 10.34—12.24

ராகுகாலம்: 3.24–4.54

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)


## உதய வாக்கு

மனிதனின் ஆசை எப்போதும் குறைவதில்லை. அது மனத்தின் பசி.

— காண்டேகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







குறிப்பு:- வாக்காளர் அட்டை இல்லாவிடினும் அடையாள அட்டையுடன் சென்று வாக்களிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான தமிழ் சகோதரர்களே!

கடந்த காலங்களில் இலங்கையின் அரசியல்வாதிகள் எல்லோரும் தமிழ் மக்களை இழிவாக நடத்தியுள்ளனர்.

தமிழராகிய உங்களுக்கும் எனக்கும் முக்கியமாக வேண்டியது இரண்டு விடயங்கள்:-

1) நிரந்தர சமாதானம்.

2) சுதந்திரமான, சமமான சமுதாயத்தில் தமிழ் மக்களும் தங்கள் பூரண பங்கை அளிக்க வழிவகை ஏற்படுத்தல்.

நான் இவை இரண்டையும் பூர்த்திசெய்ய திடசங்கற்பம் கொண்டுள்ளேன்.

இப்படிக்கு,

Ranil Wickremasinghe

ரணில் விக்கிரமசிங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(10252)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சாவகச்சேரி சிவன் கோயி லடியைச் சேர்ந்த இராசலிங் கம் பூரணம் ஆகிய எனது தேசிய அ.அட்டை, விசேட அ அட்டை வீட்டுத் திறப்பு என்பன அடங்கிய காசுபேஸ் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் தயவுசெய்து ஆலய தர்மகர்த்தாவிடம் ஒப்ப டைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (71873)

இல. 04 மத்திய மேற்கு வீதி, குருநகரைச் சேர்ந்த மரியதாஸ் மரியநாயகி என் பவரது விஷேட அடையாள அட்டை (இல. 0901034576) ஸ்ரேசன் வீதியில் 16-12-99 அன்று தவறிவிட்டது. கண் டெடுத்தவர்கள் நிருபன் தொலைத் தொடர்பு சேவை குருநகர் எனும் முகவரியில் அல்லது மேற்கண்ட முகவரி யில் ஒப்படைத்து உதவவும். (71875)

### விற்பனைக்கு

கழுவ்ப பூட்டிய பின்பு பாவிக்காத பழைய சைக்கிள் கள் விற்பனைக்குண்டு. பொ. கமலநாதன் தாவடி தெற்கு, கொக்குவில் (71869)

### ஆங்கிலக் கல்வி

சிறுவயதில் இருந்தே ஆங் கிலத்தில் கதைக்க, எழுத, வாசிக்க, இலக்கணம் பாட சாலை மாணவர்க்கு மிகவும் உகந்தது. ஆசிரியர் ந. விக் னேஸ்வரன் ஆச்சாரி நாக லிங்கசுவாமிகள் வீதி, சங் கானை 426 (302), காங்கே சன்துறை வீதி, யாழ்ப்பா ணம். (71899

### இலகு திருமண சேவை

1966 பூரட்டாதி பாதம் 3, செவ்வாய் 12, பட்டதாரி உயர்தர கொழும்பு உத்தி யோகத்தருக்கு படித்த பொருத்தமான 5' 1'' உய ரத்துக்குள் மணப்பெண் தேவை. உள் நாடு வெளிநாடு மணமக்கள் தேவைக்கு நாடுங் கள்: ஞாயிறுகளில், துரை விமலா K K. S வீதி, நாச்சி மார் கோயிலடி, யாழ்ப்பா ணம். [71898]

### ஆங்கிலம் இலகுவாக

(கணிதம் உட்பட) உங்கள் தராதரம் பரிசீலனை செய் யப்பட்டு அடிப்படை அறிவி லிருந்து ஆண்டு 6- O/L ,A/L, G A Q பட்டப்படிப்புமாணவர் வரை கற்பிக்கப்படுவர், அனு பவமுள்ள ஆசிரியர்கள் B A, B, Sc (Cey) London Inter 85, சிவன் கோயிலடி சிவன் கோயில் பின்புறம், திருநெல் வேலி. (71810]

### ENGLISH

A/L முதல் B.A. இறுதி யாண்டு வரையான வகுப்பு களுக்கு [A/L, ESL, பாடநெறி களின் படி] அவ்வவ் வகுப புகளுக்கமைய ஆங்கிலம் கற் பிக்கப்படும். இலக்கிய பாடங் களும் நடைபெறுகின்றன இடைநிறுத்தப்பட்ட காலை நேர வகுப்புகள் இவ்வாரத் திலிருந்தும், புதிய வகுப்புகள் ஜனவரி 3 ஆம் திகதியிலி ருந்தும் ஆரம்பமாகும். தொடர்பு: வ. கோவிந்த பிள்ளை, இல. 62, பழம் றோட், கந்தர்மடம். [71872]

## நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

நெல்லியடி, டிசெ.20

கரணவாய்ப் பகுதியி லுள்ள, அந்திரான் சந்தை, சாண்டா சந்தை ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி களாகத் திரிந்த சுமார் 21 நாய்கள், சுகாதார பரி சோதகரினால் நஞ்சூட்டி அழிக்கப்பட்டுள்ளன [ஐ-109]

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா பசுபதி

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பசு பதி 19-12-99 அன்று காலமானார். அன்னார் சிவ பாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தையா அலங்காரம் தம்பதிகளின் அன்பு மகனும் தெய்வானை, கணபதிப்பிள்ளை, பூரணி, நாகம்மா, காலம் சென்ற நாகேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி சிவனேசன் — சத்தியதேவி (லண்டன்), திருமதி ஜெகதீஸ்வரன் — யசோதாதேவி (பிரான்ஸ்), திருமதி றாயன் — றஞ்சினிதேவி (லண் டன்), தயாபரன் (லண்டன்), கிரிதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20-12-99) காலை 10 மணிக்கு தகனக்கிரியைக்கு கோண்டாவில் வடக்கு மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கோண்டாவில் வடக்கு. (71903)

## திருமதி சரவணமுத்து பராசக்தி

ஆவரங்காலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சரசாலை வடக்கில் வசித்து வந்தவருமான திருமதி சரவணமுத்து பராசக்தி நேற்று 19-12-99 காலை காலமானார்.

அன்னார் சங்கரப்பிள்ளை சரவணமுத்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சரவணபவானந் தன், சத்தியபவன் (குறிஞ்சி ஜவுளி சமுத்திரம்), சயந் தன் (கல்பனாஸ் புடைவையகம்), சர்மிளா (சாவ கச்சேரி மகளிர் கல்லூரி மாணவி). சகுந்தன், சத்திய பானு (சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவி) ஆகி யோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (19-12-99) ஞாயிற்றுக்கிழமை மாலை சரசாலை ஆலடி இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சந்தியபவன்
(இந்திரன் — மகன்)

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி. (சி/10251)

## திருமதி கந்தசாமி தங்கம்மா

சரசாலை வடக்கைச் சேர்ந்த கந்தசாமி தங்கம்மா நேற்று (19-12-1999) கொடிகாமத்தில் காலமா னார்.

அன்னார் கந்தசாமியின் அன்பு மனைவியும் தங்கராசா, ஞானலிங்கம், வீரசிங்கம், சற்குண ராசா, ரத்தின சிகாமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், பரஞ்சோதி, மங்களேஸ்வரி, சாந்தநாயகி, ராஜேஸ்வரி, ஸ்ரீவர்ணன் ஆகியோரின் அன்பு மாமி யும், அரவிந்தன, வைகுந்தன், அச்சுதன், கிசோனிகா துசாதிகா, நிரோஜா, யாழினி, தாமிரா, மதிஜனா, பிரபாகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றையதினம் 19-12-99) கொடிகாமத்தில் நடைபெற்றன. இவ் வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
க. ஞானலிங்கம் (மகன்)
(அஞ்சல்அதிபர்)

கண்டி வீதி,
கொடிகாமம். (71902)

## திருமதி சேதுநாதன் மகேஸ்வரியம்மா

சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி சேதுநாதன் மகேஸ்வரியம்மா 18-12-99 சனிக்கிழமை காலை 6 30 மணியளவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சேதுநாத னின் (நடராசா) அன்புமனைவியும், காலஞ்சென்றவைர முத்து லட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் மகளும், சிவ னேஸ்வரன் [மலேசியா], புவனேஸ்வரன் [அமெரிக்கா], நாகேஸ்வரன் [மலேசியா], ராசேஸ்வரன் [மலேசியா], அம்பாள் [அமெரிக்கா], உமயவடிவு [கனடா] ஆகி யோரின் பாசமிகு தாயாரும், இராமச்சந்திரன் (அமெ ரிக்கா), சுமித்திரா (மலேசியா), லோகநாதன் (கனடா) ஆகியோரின் மாமியும், திரு. சாந்தா, சிவன், கேசி யான், இந்திரா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18-12-99 சனிக் கிழமை பிற்பகல் 3 00 மணியளவில் வழுக்கையாறு மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் தய வுடன் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. திருச்செல்வம்
[பேறாமகன்].

டச்சு றோட்,
சித்தன்கேணி. [71905]

# வவுனியாவில் அதிகாலை 2 கொள்ளைச் சம்பவங்கள்

## தமிழ்க் குழு மீது மக்கள் சந்தேகம்

யாழ்ப்பாணம், டிசெ 20

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் கடந்த வெள்ளி அதிகாலை 2 மணியளவில் இரு வெவ்வேறு வீடுகளில் இடம்பெற்ற இரு கொள் ளைச் சம்பவங்களையடுத்து அண்மையில் இப்பகுதிக்கு வந்து முகாமிட்டுள்ள தமிழ்க் கட்சியொன்றின் அலுவலகம் நேற்றுக்காலை பொதுமக்களி னால் முற்றுகையிடப்பட்டது

இரு கொள்ளைச் சம்பவங் களுக்கும் இந்த முகாமிலுள்ள வர்களே பொறுப்பு என்று மக்கள் தரப்பில் தெரிவிக்கப் பட்டது. இதற்கு கட்சி உறுப் பினர்கள் மறுப்புத் தெரிவித் தனர்.

இதனைத் தொடர்ந்து முகாமிலிருந்து வெளியேறிய மக்கள் குறிப்பிட்ட கட்சியின் கொழும்பிலுள்ள தலை வருக்கு இச்சமபவம் தொடர் பாக மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்தனர்.

செட்டிகுளம் பகுதியி லுள்ள முஸ்லிம் ஒருவரின் வீட்டிற்குள் ஆயுதங்களுடன் நுழைந்த தமிழ் இளைஞர்கள் 37 ஆயிரம் ரூபா பணத்தினை யும் 20 பவுண் நகையினை யும் அபகரித்துச் சென்றுள்ள னர்.

அன்றைய தினம் அடம்பன் குளம் கமநல சேவைகள் நிலைய உத்தியோகத்தர் ஒரு வரின் வீட்டிற்குள் ஏ கே. 47 மற்றும் பிஸ்டலுடன் நுழைந்த எட்டு தமிழ் இளை ஞர்கள் ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபா ரொக்கப்பணத் தினையும் 20 பவுண் நகை களையும் கொள்ளையடித் துச் சென்றுள்ளனர்.

இந்த வீட்டில் கொள்ளை யடித்துச் சென்ற இளைஞர் களுக்கும் வீட்டிலுள்ளவர் களுக்குமிடையே கடும் வாக்கு வாதம் இடம்பெற்றதைத் தொடர்ந்து அங்கு நித்திரை யிலிருந்த குழந்தையைப் பணயமாக வைத்து இக் கொள்ளை நடத்தப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-5-164)


## லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி

யாழ்ப்பாணம்

## பதவிவெற்றிடம்

### பகுதிநேர விரிவுரையாளர்கள்

1. நாடி சாஸ்திரம்
2. Clinical Methods & Medicine
3. Pharmacology Theory & Practical Toxicology

மேற்படி பாடங்களில் ஒன்றையாவது கற்பிப் பதற்கான தகைமைகளைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அனுபவம் மற்றும் விவரங்களைக் குறிப்பிட்டு 05-01-2000 திகதிக்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

பதிவாளர்
லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி.
127, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (71867)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி அதிபர் அருட்கலாநிதி
ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளார்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி எமிலி தங்கமலர்

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர்கள்,
அலுவலக உத்தியோகத்தர்கள்,
மாணவர்கள்,

யா / புனித கென்றியரசர் கல்லூரி,
இளவாலை. (71901)

## கண்ணீர் அஞ்சலி

எமது முன்னாள் கல்விப் பணிப்பாளர்
உயர்திரு. இரா. சுந்தரலிங்கம்
அவர்களின் பாரியார்

திருமதி

### தேவராணி சுந்தரலிங்கம்

அவர்கள் காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலி களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பழைய மாணவர் சமூகம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

யா/ஞானா சாரியார் கல்லூரி
கரவெட்டி. [சி/10253]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பனவின் ஒருபகுதியை வழங்க இணக்கம்:

# யாழ். ஆஸ்பத்திரி தாதியரின் போராட்டம் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ. 20

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடமை புரியும் தாதியரின் சட்டப்படிவேலைசெய்யும் போராட்டம் நேற்று முன்தினத்துடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

தாதியரால் கடந்த காலங்களில் செய்யப்பட்ட மேலதிக நேரவேலைக்கான ஊதியத்தை ஆஸ்பத்திரி நிர்வாகம் நிதிப்பற்றாக்குறை காரணமாக இடை நிறுத்தி வைத்ததை அடுத்து தாதியர் இச் சட்டப்படி வேலைப்போராட்டத்தில் இறங்கினர்.

மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்கும்படி கோரி நடத்தப்பட்ட இப்போராட்டம் கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

ஏற்கனவே நிலவிவந்த தாதியர் பற்றாக்குறை மற்றும் தற்போது ஏற்பட்டுள்ள டாக்டர்கள் பற்றாக்குறை என்பனவற்றுக்கு மத்தியில் தாதியரின் இப்போராட்டம் யாழ். ஆஸ்பத்திரியின் வைத்திய சேவையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. நோயாளர்கள், வைத்திய சேவைப் பாதிப்பினால் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

நோயாளரின் சிகிச்சைக்கு அத்தியாவசியமான இரத்தப் பரிசோதனைகள், சிறுநீர், மற்றும் முக்கிய பரிசோதனைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெற்றுக் கொண்டிருந்தமையால், அத்தியாவசிய வைத்திய சேவைகள் ஸ்தம்பிதமடைந்தன. சத்திரசிகிச்சைகள், யாவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெற்றன.

நோயாளர்களின் அவல நிலை, டாக்டர்களின் சேவைத் தடங்கல்கள் என்பன நீடித்துக் கொண்டிருந்ததை அடுத்து அவதிக்குள்ளான நோயாளர்களும், டாக்டர்களும் வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் முறையிட்டனர்.

இதனையடுத்து நெருக்கடி நிலையைச் சமாளிப்பதற்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படும் நோயளர்களின் எண்ணிக்கையையும், அவசரமாகச் செய்ய வேண்டியவை தவிர்ந்த சத்திர சிகிச்சைகளையும் குறைத்துவிட ஆஸ்பத்திரி நிர்வாகம் முயற்சித்ததாக தெரிய வந்தது. எனினும் தற்போதைய யுத்த சூழ்நிலையினால் ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளரின் எண்ணிக்கை அதிகரித்தே வந்தது.

நெருக்கடி நிலை தொடர்ந்ததை அடுத்து ஆஸ்பத்திரி நிர்வாகம் கூட்டிய அவசர ஆலோசனைக் கூட்டத்தில் தாதியருக்குரிய மேலதிக நேரக் கொடுப்பனவில் ஒரு பகுதியை— இரண்டுமாத கொடுப்பனவை — உடனடியாக வழங்க இணக்கம் காணப்பட்டதை அடுத்து தாதியரின் சட்டப்படியான வேலை செய்யும் போராட்டம் முடிவுக்கு வந்தது.

(ஐ)


யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

**பிறின்சஸ்காஷ் கப்பலில்**

பொருள்கள் ஏற்றி பாதிக்கப்பட்ட

**வர்த்தகர்களுக்கான அறிவித்தலும், நத்தார் பண்டிகை விடுமுறை பற்றிய அறிவித்தலும்**

''பிறின்சஸ்காஷ்'' கப்பலில் ஏற்பட்ட இழப்பீடு பற்றிய கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருடன் 24-12-99 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறும். பிறின்சஸ்காஷ் கப்பலில் பொருள்கள் ஏற்றி பாதிக்கப்பட்ட வர்த்தகர்களை இக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

25-12-99 சனிக்கிழமை சகல வர்த்தக நிறுவனங்களையும் பூட்டி ஊழியர்கள் நத்தார் பெருநாளைக் கொண்டாடுவதற்கு சகல வர்த்தக ஸ்தாபன உரிமையாளர்களும் உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

இல. 27, நவீனசந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம். (சி/10240)



2 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



செல்வி

**ராஜேந்திரசர்மா பிரியங்கா**

அளவெட்டி பெருமாக் கடவைப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த

**பிரம்மஸ்ரீ சி. ராஜேந்திரசர்மா - லதா**

தம்பதிகளின் புதல்வி

செல்வி பிரியங்கா

தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று கொண்டாடுகின்றார்.

இறையருளால் சகல நலன்களும் பெற்று பெருவாழ்வு வாழ அவரை வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
தாத்தா, அம்மம்மா, மாமாமார்,
சித்திமார், தங்கை சாரங்கா.

வைத்தீஸ்வரன் கோயில்,
வண்ணை. (71874)


## தமிழ் இளைஞன் அடித்துக் கொலை

கொழும்பு, டிசெ. 20

கொழும்பு வத்தளைப் பகுதியில நேற்று முன்தினம் காலை தமிழ் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதவர்களினால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொலை செய்யப்பட்டவர் அடையாளம் காணப்படவில்லை.

பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

(ஐ-5)

## உர விற்பனை நிலையம் திறப்பு

நெல்லியடி, டிசெ. 20

வடமராட்சிப் பகுதியிலுள்ள விவசாயிகளின் நன்மை கருதி, உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், குஞ்சர் கடைச் சந்தியில் கிருமி கொல்லிகள், உர வகைகள் போன்றவைகளை விற்பனை செய்வதற்கு புதிய விற்பனை நிலையம் ஒன்றைக் கடந்த மாதம் திறந்துவைத்துள்ளது.

(ஐ-109)

## சந்தைக் கட்டட வேலை பூர்த்தி

வலி. தென்மேற்கு, டிசெ. 20

நவாலி பிரசாத் சந்தைக் கட்டட மீள் புனரமைப்பு வேலைகள் 60 ஆயிரம் ரூபா செலவில் முடிக்கப்பட்டுள்ளதாக மானிப்பாய்ப் பிரதேச சபைத் தலைவர் வெ. அ. ஜோன்சன் தெரிவித்தார்.

இதேவேளை—

கட்டுடை சனசமூக நிலைய மீள் புனரமைப்புவேலைகளும் 40 ஆயிரம் ரூபா செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

(ஐ-185)

# கொழும்புத்துறை கரையோரம் ஷெல்கள் வீழ்ந்ததால் பதற்றம்

அரியாலை, டிசெ. 20

சனிக்கிழமை பிற்பகல் 5-30 மணியளவில் கொழும்புத்துறை கரையோரப் பகுதிகளை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலினால் கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பெரும் பதற்றமடைந்து காணப்படுகின்றனர்.

ஐந்துக்கும் மேற்பட்ட ஷெல்கள் இப்பகுதிகளில் பாரிய சத்தத்துடன் வீழ்ந்து வெடித்துள்ளன.

நெடுங்குளம் வலல் பகுதியிலும் ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்துள்ளது. இந்த ஷெல்லினால் ஒருவர் சிறு காயத்திற்கு உள்ளானார்.

இந்த ஷெல் தாக்குதலை அடுத்து நெடுங்குளம் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து கொழும்புத்துறை செபமாலை மாதா கோவிலுக்கும் அரியாலை, நாயன்மார்கட்டு பகுதிகளை நோக்கியும் சென்றனர்.

கொழும்புத்துறை கிழக்கு மேற்கு பகுதி மக்களும் பெரும் பதற்றமடைந்து காணப்பட்டனர்.

(ஐ-17)


## கண்ணீர் அஞ்சலி

அரியாலையைச் சேர்ந்த

**திருமதி பாக்கியநாதன் பரமேஸ்வரி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு. வே. நகுலன்

சரசாலை வடக்கு, சாவகச்சேரி. (71900)



**லைடனின் மலிவு விற்பனை**

லைடன் வாடிக்கையாளர் நன்மை கருதி

**25 - 11 - 99 முதல்**

**நத்தார்-புதுவருட**

மலிவு விற்பனையை ஆரம்பித்துள்ளோம
என்பதை வாடிக்கையாளர்களுக்கு
அறியத்தருகின்றோம்.
எமது புடைவை நிலையத்தில் வாங்கும்
ஒவ்வொரு புடைவைத் தினிசுகளுக்கும்
விசேட கழிவு வழங்கப்படும்.

**லைடன் புடைவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
TP — 2381 (சி/9806)





காரைநகர்
ஈழத்து
சிதம்பரத்தில்

**வெள்ளோட்டம் காணும் தேர்**

எங்கள் சிவன் ஆடிவரும்
எழில் மிகுந்த தேரிது
பொங்கும் கலை மரபு
பூத்து நிற்கும் தேரிது
சங்கத் தமிழ் வேதங்கள்
சான்றுரைக்கும் தேரிது
வெள்ளைக் குதிரைகள்
விரைந்திழுக்கும் தேரிது
தில்லை நடராஜனுக்கு
திருவாதிரையில் சமைத்த தேரிது
எல்லை யில்லா அழகோடு
இன்று ''வெள்ளோட்டம்'' காண்கிறது.

— மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன்

இன்றைய வெள்ளோட்ட விழா சிறப்புற வாழ்த்துவோர்:

**''விநாயகர் ரேடேர்ஸ்''**

இல. 1026, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி.
(குண்டங்கரை — களபூமி — காரைநகர்)
(71886)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டப் பாடசாலைகள் அடுத்த ஆண்டு முதல் சீரமைப்பு

## இரு பிரிவுகளில் வகைப்படுத்தப்படும்

அச்சுவேலி, டிசெ. 20

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் செயற்பாடுகள் அடுத்த வருட ஆரம்பத்தில் மீள்கட்டமைப்புச் செய்யப்படவுள்ளன.

பாடசாலைகளின் மீள்கட்டமைப்புத் தொடர்பான பூர்வாங்க ஏற்பாடுகள் வடக்கு-கிழக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் ஆலோசனைக்கு ஏற்ப யாழ். மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் நடைபெற்று வருகின்றன.

பிரதேசம், பாடசாலைகளின் வள வசதிகள், அமைவிடம், மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் வசதிகளைக் கருத்தில் கொண்டு மீள்கட்டமைப்பு தொடர்பான ஒருங்கமைப்புக்கள் செய்யப்படவுள்ளன.

முதலாம் தரம் தொடக்கம் 9 ஆம் தரம் வரையிலான வகுப்புக்களைக் கொண்ட 'இளநிலைப் பாடசாலைகள்' 10 ஆம் தரம் தொடக்கம் 13 ஆம் தரம் வரையான வகுப்புக்களைக் கொண்ட 'முதுநிலைப்பாடசாலைகள்' -என்ற வகைப்பாட்டின் கீழ் பாடசாலைகள் மீள்கட்டமைப்புச்செய்யப்படவுள்ளன. [ஐ-11]

# குருநாகல் பட்டதாரி ஆசிரியர் ரணிலை ஆதரிப்பதென முடிவு

கொழும்பு, டிசெ. 20

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதென குருநாகல் மாவட்ட பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது—

எமது சங்கம் எவ்வித கட்சிகளைச் சாராத போதிலும் சந்திரிகாவின் அரசு ஆசிரியர்களின் மேம்பாட்டுத் திட்டங்கள் சம்பந்தமாக எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாத காரணத்தால் இம்முறை ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்கு முடிவெடுத்துள்ளோம்.

எமது சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் 12, 400 அங்கத்தவர்கள் ஏகமனதாக அவரை ஆதரிப்பதற்கு முடிவெடுத்துள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க கல்வி அமைச்சராக இருந்த காலப் பகுதியில் அவர் கல்வித் துறைக்கு ஆற்றிய சேவையை கருத்திற் கொண்டு, 21 ஆம் நூற்றாண்டிற்கு ஏற்ற கல்வி முறையை உருவாக்க அவர் திடசங்கற்பம் பூண்டு உள்ளதாலும், எதிர்காலத்தில் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கி ஒற்றுமையாக வாழ வழியேற்படுத்துவேன் என உறுதி கூறியுள்ளதாலும்எமது சங்கம் அவரை ஆதரிக்க முடிவெடுத்துள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# காயமடைந்த இரு பெண்கள் நான்கு நாள்களின் பின் மீட்பு

சாவகச்சேரி, டிசெ. 20

தனங்களப்புப் பகுதியில் கடந்த 12 ஆம் திகதி வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் படுகாயமடைந்து ஆஸ்பத்திரிக்கு செல்ல முடியாத நிலையிலிருந்த இரு குடும்பப்பெண்கள் நான்கு நாள்களின் பின்பு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளினால் மீட்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருபவர்கள் தெரிவித்த தகவலையடுத்து, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கடந்த வெள்ளியன்று தனங்களப்புப் பகுதிக்கு நேரில் சென்று, மேற்படி இரு பெண்களையும் அங்கிருந்து வெளியே கொண்டு வந்தனர்.

தனங்களப்பைச் சேர்ந்த திருமதி இராமு பொன்னம்மா (வயது 54), திருமதி சி. இலட்சுமிப்பிள்ளை(வயது 50) ஆகியோரே காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டவர்களாவர்.

இவர்களில் ஒருவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலும் மற்றவர் யாழ். போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-31-5)

# யாழ். ஆஸ்பத்திரியில் புதிய டாக்டர்கள் விடுதி

யாழ்ப்பாணம், டிசெ. 20

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமைபுரியும் வதிவிட டாக்டர்களுக்காக அமைக்கப்பட்ட விடுதி நிர்மாண வேலைகள் யாவும் முடிக்கப்பட்டு வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது

சுமார் 96 இலட்சம் ரூபா செலவில் கட்டடத்திணைக்களத்தினால் முற்றிலும் நவீன முறையில் அமைக்கப்பட்ட இக்கட்டடம் நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்திடம் கட்டடத்திணைக்களப் பொறியியலாளர் என். தேவராசவினால் கையளிக்கப்பட்டது.

எதிர்வரும் ஜனவரி முதல் இவ் விடுதி டாக்டர்களின் பாவனைக்கு வழங்கப்பட உள்ளது. (ஐ)

# டாக்டர்களின் வேலை நிறுத்தம் சனிக்கிழமையுடன் முடிவு

கொழும்பு, டிசெ. 20

அரச வைத்திய அதிகாரிகள் கடந்த ஒருவார காலமாக மேற்கொண்டிருந்த வேலை நிறுத்தம் கடந்த சனிக்கிழமை கைவிடப்பட்டது.

பல்வேறு தரப்பினராலும் விடுக்கப்பட்ட வேண்டுகோள்களையடுத்தே இந்த வேலை நிறுத்தத்தை கைவிட்டதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் டாக்டர் பிரசன்ன குணசேகர தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தப் போராட்டத்துக்கு அரசு அரசியல் மூலாம் பூச முனைந்த போதும் கூட எமது கோரிக்கைகளை முன்வைத்து தொடர்ந்து வேலை நிறுத்தத்தை மேற்கொண்டோம்.

தற்போதைய தேர்தல் சூழ்நிலையைகருத்திற் கொண்டும் பல்வேறு தரப்புக்களாலும் விடுக்கப்பட்ட வேண்டுகோள்களையடுத்தும் மேற்படி போராட்டத்தைக் கைவிட முடிவு செய்தோம்— என அவர் கூறினார். (ஐ-5)

# விவசாயிகள் கருத்தரங்கு

சண்டிலிப்பாய், டிசெ. 20

பண்டத்தரிப்புப் பகுதியில் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கான கருத்தரங்கு ஒன்று பண்டத்தரிப்பு விவசாய சம்மேளனத்தினால் கடந்த 16 ஆம் திகதி கிராம அலுவலர் அலுவலகத்தில் நடத்தப்பட்டது.

சம்மேளனத்தின் தலைவர் ச. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் யாழ் மாவட்ட கமநல விரிவாக்கப் பிரிவின் பாடவிதான உத்தியோகத்தர் எஸ். நல்லதம்பி, கீரிமலை கமநல சேவை கேந்திர நிலையப்பிரிவு விவசாய போதனாசிரியர் கே. விஜயரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு நெற்பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை அழிக்கும் முறை பற்றியும்,கிருமி நாசினி தெளித்தல் பற்றியும், பசளையிடுதல் மற்றும் பயிர்ப்பாதுகாப்பு பற்றியும் விவரமாக விளக்கமளித்தனர். விவசாயிகள் எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகள் பற்றியும் கேட்டறிந்து அவற்றுக்கான ஆலோசனைகளையும் எடுத்துக்கூறினர். (ஐ-135)

# கப்பலில் பொருள்கள் இறக்கம்

வடமராட்சி, டிசெ. 20

பருத்தித்துறை துறைமுகத்தில் இரு கப்பல்களில் இருந்து அத்தியாவசிய மற்றும் உணவுப் பொருள்கள் இறக்கப்பட்டு வருகின்றன.

'குமண', 'மேக்ஸ்ஹண்டி' ஆகிய இரு கப்பல்களுமே பொருள்களை இறக்கி வருகின்றன. (ஐ-173)

# இலவச மருத்துவ பரிசோதனை

சண்டிலிப்பாய், டிசெ. 20

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம் சுதுமலை யுவசக்தி சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் சுதுமலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் அண்மையில் நடத்திய மருத்துவ பரிசோதனையின்போது 68 பேருக்கு பொதுமருத்துவ பரிசோதனையும், 103 பேருக்கு நீரிழிவு பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டன.

எஸ்.எம். பெர்ணான்டோ நிறுவனத்தினரால் 121 பேருக்கு கண்பரிசோதனையும் நடத்தப்பட்டது. மருத்துவ பரிசோதனையை லயன்ஸ் கழக டாக்டர்களான டாக்டர் சோ. சுந்தர்ராஜன், டாக்டர் எஸ். அருமைத்துரை, டாக்டர் எஸ். சிவனடியான், டாக்டர் செல்வி ஈஸ்வரி கந்தையா ஆகியோர் மேற்கொண்டனர். ஆனைக்கோட்டை பொதுச்சுகாதார பரிசோதகர் வி. தயாமோகன் நோய்த்தடுப்பு முறைகள் பற்றி விளக்கமளித்தார். (ஐ-135)

## வடமராட்சிப் பகுதியில்

# அயடீன் கலக்காத உப்பு சுகாதார பரிசோதகரினால் மீட்பு

அயடீன் கலக்காத நிலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பெருமளவு உப்புப் பைக்கற்றுக்கள் வடமராட்சிப் பகுதியில் உள்ள இரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளிலிருந்து நேற்று முன்தினம் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் மீட்கப்பட்டுள்ளன.

வலி. கிழக்கு தென்பகுதி, (நீர்வேலி) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உப்பு பைக்கற்றுக்களே சுகாதார பரிசோதகர்களினால் உடுப்பிட்டி, நெல்லியடிப் பகுதியிலுள்ள அவர்களது கிளை விற்பனை நிலையங்களிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

நெல்லியடி பொதுச் சுகாதார பரிசோதகர் எம் ரவிச்சந்திரன், உடுப்பிட்டி பொதுச் சுகாதார பரிசோதகர் சி. நாகேந்திரம் ஆகியோர் ஒன்றிணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் போது பாவனைக்குதவாத உப்புப் பைக்கற்றுக்கள் சிக்கின.

இதேவேளை— உடுப்பிட்டிச் சந்தைப் பகுதியிலுள்ள சில பலசரக்கு வியாபார நிலையங்களிலிருந்தும் 'பாவனைக்கு உதவாத பிஸ்கட் வகைகள் மீட்கப்பட்டு அவை முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக பருத்தித்துறை பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். செல்வராட்ணம் தெரிவித்துள்ளார். (ஐ-109)


# அரசாங்க அறிவித்தல்

## சனாதிபதித் தேர்தல் - 1999-12-21

### வாக்களித்தல் தொடர்பான ஆரம்ப அறிவுறுத்தல்கள் சில

விருப்புத் தெரிவித்தல் மூலம் வாக்களித்தல் பெரும்பாலான வாக்காளர்களுக்குப் பழக்கப்பட்டதொன்றல்ல. 99-12-21 ஆம் திகதி நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் வாக்களித்தல் பற்றி ஒருசில கருத்துக்களை விளக்குதல் சிறந்ததாகவிருக்கும். இத்தேர்தலில் பதின்மூன்று வேட்பாளர்கள் போட்டியிடுவதால் வாக்களிப்பின்போது இரண்டாம், மூன்றாம் விருப்புக்களைத் தெரிவித்தல் தொடர்பாக ஐயங்கள் ஏற்பட இடமுண்டு எனவே முக்கியமான சில விடயங்கள் தொடர்பாக உங்களுக்கு விளக்கமளிக்க விரும்புகின்றேன்.

1. உங்களுடையவாக்கு ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றாக அமைய வேண்டுமாயின் முதலில் வாக்கை அளித்தல் வேண்டும். விருப்புக்களைத் தெரிவித்திருக்காவிடினும் வாக்கை மட்டும் அளித்திருப்பின் அது ஏற்றுக்கொள்ளப்படும்.
2. வாக்கை அடையாளமிடாது விருப்புக்களை மாத்திரம் அடையாளமிடுவதனால் உங்கள் வாக்கு நிராகரிக்கப்படும்.
3. நீங்கள் வாக்கை மாத்திரம் அளிப்பதாயின்: வாக்குச் சீட்டில் அடையாளமிட வேண்டியது ஒரு குறியீடு மாத்திரமேயாகும். அது ''X'' அல்லது ''1'' ஆக இருக்கலாம். அப்படியில்லாவிடின் உங்களை அடையாளம் காண முடியாத ஏதுமொரு குறியீடாக இருக்கவும் முடியும்.
4. நீங்கள் வாக்கு, விருப்புத் தெரிவித்தல்களைப் பிரயோகிப்பதாயின்
   1. உங்களின் வாக்கிற்காக ''1'' இலக்கத்தை இடுவதாயின் உங்களின் இரண்டாவது விருப்புத் தெரிவித்தலுக்காக இலக்கம் ''2'' ஐயும், மூன்றாவது விருப்புத்தெரிவித்தலுக்காக இலக்கம் ''3'' ஐயும் இடவும்.
   2. உங்களது வாக்கை புள்ளடியினால் அல்லது வேறு அடையாளமொன்றினால் இடுவதாயின், இரண்டாவது விருப்புத் தெரிவித்தலை இலக்கம் ''2'' ஐயும்,மூன்றாவது விருப்புத்தெரிவித்தலை இலக்கம் ''3'' இனாலும் அடையாளமிடவும்.
   3. விருப்புத் தெரிவித்தலின்போது ''2'' ஆம் விருப்புத் தெரிவித்தலை குறிப்பிடாது ''3'' ஆம் விருப்புத் தெரிவித்தலை மாத்திரம் குறிப்பிட்டிருந்தால் அது விருப்புத் தெரிவித்தலாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இறுதியாக நீங்கள் வாக்கை மாத்திரம் அளிப்பதாயின் நீங்கள் விரும்பும் வேட்பாளரின் பெயர், சின்னம் என்பவற்றுக்கு எதிரேயுள்ள கூட்டில் ''1'' இலக்கத்தினை அல்லது உங்களுக்கு பழக்கமான புள்ளியை (''X'') இடவும்.

நீங்கள் வாக்கைப் போன்றே விருப்புத் தெரிவித்தல்களையும் தெரிவிக்க விரும்பினால் நீங்கள் விரும்பும் வேட்பாளரின் பெயர், சின்னத்துக்கெதிரே ''1'', ''2'', ''3'' என குறிப்பிடுதல் மிகவும் உகந்த முறையாகுமென நினைவு கூருகிறேன்.

டீ. எம். பி. பி. தசநாயக்க
பதில் தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
ஸ்ரீஜயவர்த்தனபுர.
1999—12—19. (சி/10256)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். கரையோரப் பகுதியில் அமைந்த வாக்களிப்பு நிலையங்கள் மாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 20

யாழ். கரையோரப் பகுதிகளில் தொடர்ந்து நிலவும் பதற்றமான சூழ்நிலை காரணமாக அந்தப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்புநிலையங்களின்பாதுகாப்புக் கருதி வேறு இடங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

பதற்றம் நிலவும் பகுதிகளிலுள்ள மக்கள் வெளியேறியுள்ளதைத் தொடர்ந்து அந்தப் பகுதிகளில் உள்ள வாக்களிப்பு நிலையங்களை இடமாற்றம் செய்யுமாறு யாழ் தெரிவத்தாட்சி அலுவலர் தேர்தல் ஆணையாளரிடம் கோரியிருந்தார்.

அதைத் தொடர்ந்து பின்வரும் வாக்களிப்பு நிலையங்களை வேறு இடங்களுக்கு மாற்றம் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ். தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவித்தார்.

பருத்தித்துறை தேர்தல் தொகுதி

குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை, நாகர்கோயில் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை, செம்பியன் பற்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையங்கள் வல்லிபுரக் கோயில் வளவில் அமைந்துள்ள கட்டடத்துக்கு.

சாவகச்சேரி தொகுதி

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய வாக்களிப்பு நிலையம் நாவற்குழி மகா வித்தியாலயத்துக்கு.

கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வாக்களிப்பு நிலையம் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்துக்கு.

மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலய வாக்களிப்பு நிலையம் வரணி மகா வித்தியாலயத்துக்கு.

நல்லூர் தொகுதி

அரியாலை பொன்னம்பலம் வீதி, கலைவாணி சனசமூக நிலைய வாக்களிப்பு நிலையம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்துக்கு.

புங்கன்குளம் வீதி, அரியாலை சனசமூக நிலைய வாக்களிப்பு நிலையம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்துக்கு.

கிளிநொச்சி தொகுதி

கிளாலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, வேம்பொடுகேணி மகா வித்தியாலயம், சேரன்பற்று கணேச வித்தியாலயம் ஆகிய வாக்களிப்பு நிலையங்கள் பளை மகா வித்தியாலயத்துக்கு.

(உ-3-9)

# தேர்தல் வன்செயல்கள் ஆயிரத்தைத் தாண்டின

கொழும்பு, டிசெ. 20

நாளை நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலை ஒட்டி நேற்று வரை ஆயிரத்து 12 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல் வன்முறைகளுக்குப் பொறுப்பான பொலீஸ் அதிகாரி ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இவற்றில் 921 முறைப்பாடுகள் வன்முறையுடன் தொடர்புடையன என்றும்—

பொதுமக்கள் ஐக்கியமுன்னணிக்கு எதிராக 333 முறைப்பாடுகளும் ஐ. தே. கவுக்கு எதிராக 485 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என்றும்—

அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-3-சி)

# திருவாசக விழாவும் நூல் வெளியீடும்

காரைநகர், டிசெ 20

காரைநகர் மணிவாசகர் சபையின் ஆதரவில் திருவாசகப் பெருவிழா இன்று நண்பகல் 12 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதலவர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் காரைநகர் சிவன்கோயில் வசந்த மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணஐயர் 'திருவாசகம் காட்டும் ஆன்மீக வாழ்வு' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். தொடர்ந்து எஸ் ஆர் எஸ். தேவதாசன் எழுதிய 'தில்லைக் கூத்தன் திருநடனம்' எனும் நூல் வெளியீடும் இடம் பெறும்.

(க-73)

# வாக்களிப்பு முறை; ஆணையாளர் விளக்கம்

கொழும்பு, டிசெ. 20

நாளை நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் எவ்வாறு தமது வாக்குகளைச் செலுத்துவது என்பது குறித்து பதில் தேர்தல்கள் ஆணையாளர் டி. எம் பி. பி தசநாயக்க பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

நாளை தேர்தலில் பதின்மூன்று வேட்பாளர்கள் போட்டியிடுவதால் வாக்களிப்பின்போது இரண்டாம், மூன்றாம் விருப்புக்களைத் தெரிவித்தல் தொடர்பாக பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்கலாம் என்ற காரணத்துக்காகவே தாம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளதாக பதில் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

★ உங்களுடைய வாக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதொன்றாக அமைய வேண்டுமாயின் முதலில் வாக்கை அளித்தல் வேண்டும். விருப்புக்களைத் தெரிவித்திருக்காவிடினும் வாக்கை மட்டும் அளித்திருப்பின் அது ஏற்றுக்கொள்ளப்படும்.

★ வாக்கை அடையாளமிடாது, விருப்புக்களை மாத்திரம் அடையாளமிடுவதனால் உங்கள் வாக்கு நிராகரிக்கப்படும்.

★ நீங்கள் வாக்கை மாத்திரம் அளிப்பதாயின்:-

வாக்குச்சீட்டில் அடையாளமிட வேண்டியது ஒரு குறியீடு மாத்திரமேயாகும். அது "×" அல்லது "1" ஆக இருக்கலாம். அப்படி இல்லாவிடின் உங்களை அடையாளம் காணமுடியாத ஏதுமொரு குறியீடாக இருக்கவும் முடியும்.

★ நீங்கள் வாக்கு விருப்புத் தெரிவித்தல்களை பிரயோகிப்பதாயின்,

1. உங்களின் வாக்குக்காக "1" இலக்கத்தை இடுவதாயின் உங்களின் இரண்டாவது விருப்புத் தெரிவித்தலுக்காக இலக்கம் "2" ஐயும் மூன்றாவது விருப்புத் தெரிவித்தலுக்காக இலக்கம் "3" ஐயும் இடவும்.

2. உங்களது வாக்கை புள்ளடியினால் அல்லது வேறு அடையாளமொன்றினால் இடுவதாயின் இரண்டாவது விருப்புத் தெரிவித்தலை இலக்கம் "2" ஐயும் மூன்றாவது விருப்புத் தெரிவித்தலை இலக்கம் "3" இனாலும் அடையாளமிடவும்.

3. விருப்புத் தெரிவித்தலின் போது "2" ஆம் விருப்புத் தெரிவித்தலை குறிப்பிடாது "3" ஆம் விருப்புத் தெரிவித்தலை மாத்திரம் குறிப்பிட்டிருந்தால் அது விருப்புத் தெரிவித்தலாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இறுதியாக நீங்கள் வாக்கை மாத்திரம் அளிப்பதாயின் நீங்கள் விரும்பும் வேட்பாளரின் பெயர், சின்னம் என்பவற்றுக்கு எதிரேயுள்ள கூட்டில் "1" இலக்கத்தினை அல்லது உங்களுக்கு பழக்கமான புள்ளடியை ("×") இடவும்.

நீங்கள் வாக்கைப் போன்றே விருப்புத் தெரிவித்தல்களையும் தெரிவிக்க விரும்பினால் நீங்கள் விரும்பும் வேட்பாளரின் பெயர், சின்னத்துக்கெதிரே "1", "2" "3" என குறிப்பிடுதல் மிகவும் உகந்த முறையாகுமென நினைவு கூருகிறேன்

— என்றுள்ளது. (உ-7-3)


# கேள்விக்கு என்ன பதில்?

- தினமும் நம்மினம் அனுபவிக்கும் அத்தனை துன்பதுயரங்களுக்கும் அவமான - அவலங்களுக்கும் காரணமான கொடிய போரினை உடனடியாக நிறுத்திடத் தயாராகவுள்ள வேட்பாளர் யார்?
- மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன், போரின் மறுதரப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் அரசியல் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக உள்ள வேட்பாளர் யார்?
- எரிந்துகொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணத் துணிச்சலோடு உறுதி பூண்டிருக்கும் வேட்பாளர் யார்?

இத்தனையும் இருந்தால் போதாது...!
இவற்றைச் சாதிப்பதற்கு - தேர்தலில் வெற்றி வாய்ப்புக் கொண்டிருக்கும் வேட்பாளர் யார்?

இத்தனை கேள்விகளுக்கும் ஒரே பதில்

# ரணில் விக்கிரமசிங்க

இருளைச் சபித்துக் கொண்டிருப்பதை விட
ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி வைப்பது எவ்வளவோ மேலானது!

வாக்குரிமை எமது பிறப்புரிமை. மறுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எமது அடிப்படை உரிமைகளை நிலைநாட்ட எமது வாக்குரிமையை அறிவு பூர்வமாகவும் ஆக்கபூர்வமாகவும் பிரயோகிப்போம்.

அதனை நாமே நமக்காகப் பிரயோகிக்க நாம் தவறினால் எமது பெயரில் அதனைத் துஷ்பிரயோகம் செய்ய எத்தனையோ பேர் காத்திருக்கின்றார்கள்...!
எனவே தவறாமல் நேரத்துடன்
**யானைச் சின்னத்துக்கு வாக்களியுங்கள்.**

— தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ)

(71911)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்குதலைக் கண்டிக்கிறது கூட்டணி

"ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சி முரட்டுத்தன்மையானது; கோழைத்தனமானது"-என்று தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்துள்ளது.

கூட்டணியின் செயலாளர் இரா.சம்பந்தனால் நேற்று விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டினது அரசியலின் தலைவிதியை மாற்றுவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற - குறிப்பாக அரசியல் தலைமைத்துவங்களுக்கு எதிரான - வன்முறைகள் பெரும் விசனத்தையே ஏற்படுத்துகின்றன.

இத்தகைய நடவடிக்கைகள் நாட்டில் அராஜக நிலையை உண்டு பண்ணி அனைத்து மக்களினதும் எதிர்காலத்தை பாதக நிலைக்கு உள்ளாக்கிவிடும் - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் - ஜா-எலவில் ஐ.தே.கவின் கூட்டத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தையும் அவர் கண்டித்துள்ளார்.

# சந்திரிகாவுக்கு சிகிச்சை அளிக்க இந்தியா தயார்!

குண்டுத் தாக்குதலில் காயமடைந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குத் தேவையான சகல மருத்துவ உதவிகளையும் வழங்குவதற்கு இந்திய அரசு தயாராக இருப்பதாக இலங்கைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன், பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் ஆகியோர் இது விடயமாகக் கடிதங்களை சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பியுள்ளனர்.

அத்துடன் வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங் கொழும்பில் உள்ள தூதருடன் தொடர்புகொண்டு இந்த உதவி தொடர்பாக ஜனாதிபதியிடம் நேரடியாகத் தெரிவிக்குமாறு தூதரைப் பணித்துள்ளார். (உ-3-7)

# பாதுகாப்புக் குறைபாடே தாக்குதலுக்கு இடமளித்தது!

கொழும்பு,டிசெ.20

கொழும்பு நகர மண்டபத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு பாதுகாப்பு வலய அமைப்பில் உள்ள குறைபாடு காரணமாகவே இடம்பெற்றது என்பதற்கு நம்பத்தகுந்த ஆதாரங்கள் கிடைத்துள்ளன, என்று வெகுஜனத் தொடர்பு அமைச்சர் மங்களசமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் தாம் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவித்தல் வந்தகாலந் தொட்டே தேர்தலைக் குழப்ப சில குழுவினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர் என்றும் -

இந்த நடவடிக்கையின் உச்சக்கட்டம்தான் இந்தச் சம்பவமோ என சந்தேகிக்கத் தோன்றுகிறது என்றும்- அமைச்சர் மேலும் தெரிவித்தார். (உ-3-7)

## சேதமாக்கப்பட்டது

ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டே தொகுதி அமைப்பாளரும் எம்.பியுமான ரவி கருணநாயக்கவின் அலுவலகம் நேற்றிரவு இனந்தெரியாத குழு ஒன்றினால் தாக்கப்பட்டது. அவரைச் சந்திக்க வந்திருந்த இரு பொது மக்கள் காயமடைந்தனர். அவரின் வாகனமும் சேதமடைந்தது.

## பெறுபேறுகள் வந்தன

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் நேற்று யாழ்.நகரில் வெளியாகின.

விமானம் மூலம் நேற்றுப் பிற்பகல் எடுத்துவரப்பட்ட பெறுபேறுகள் உடனடியாக பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. (உ-9)

## ஸிம்பாப்வேக்குவெற்றி

ஹராரே,டிசெ.20

இலங்கை - ஸிம்பாப்வே அணிகளுக்கிடையே ஸிம்பாப்வேயில் நடைபெற்றுவந்த சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று நடைபெற்ற ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் ஆட்டத்தில் ஸிம்பாப்வே அணி ஆறு விக்கெட்டுக்களால் இலங்கை அணியை வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 202 ஓட்டங்களை மாத்திரம் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. டில்ஷான் திலகரட்ண அரைச்சதம் அடித்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸிம்பாப்வே அணி வெற்றிக்குத் தேவையான ஓட்டங்களை 46.2 ஓவர்களிலேயே பெற்றுக்கொண்டது. க்றாண்ட்ப்ளவர் அரைச்சதம் அடித்தார்.

நேற்றைய ஆட்ட நாயகனாக கௌவிற்றல் தெரிவுசெய்யப்பட்டார்.

நடைபெற்று வந்த இந்த ஆட்டத் தொடரை இலங்கைஅணி 3-1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8-4)


"அமைதியான சூழலில்
தரமான ஆசிரியர்களின்
சிறப்பான வழிகாட்டலில்"

**A/L : 2002**

**கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம்.**

சிறந்த பெறுபேறு பெற உடன் அனுமதிபெறுங்கள்!

**(எமது நிறுவன 99, 4A எடுத்த 7மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்)**

**சயன்ஸ் அக்கடமி, நல்லூர்.**

(71904)


## அரசாங்க அறிவித்தல்

### ஜனாதிபதித்தேர்தல் 21-12-1999
### தேர்தல் மாவட்டம் இல: 10-யாழ்ப்பாணம்
### மாற்றப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்கள் தொடர்பான நிரல்

**வாக்கெடுப்பு பிரிவு: எ-பருத்தித்துறை**

| வா.மா.இல | வாக்கெடுப்பு நிலையம் | மாற்றப்பட்ட வாக்கெடுப்பு நிலையம் |
| --- | --- | --- |
| 25 | யா/குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை | வல்லிபுரக்கோயில வளவில் அமைந்துள்ள கட்டடம். |
| 26 | யா/குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை | |
| 27 | யா/அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ்கலவன் பாடசாலை | |
| 28 | யா/நாகர்கோவில் அமெரிக்கன் மிஷன் தமிழ்கலவன்பாடசாலை | |
| 29 | யா/செம்பியன்பற்று அரசினர் தமிழ்கலவன் பாடசாலை | |
| 30 | யா/செம்பியன்பற்று அரசினர் தமிழ்கலவன்பாடசாலை | |
| 31 | யா/மருதன்கேணி இந்து தமிழ்கலவன் பாடசாலை | |
| 32 | யா/மருதன்கேணி இந்து தமிழ்கலவன் பாடசாலை | |
| 33 | யா/மருதன்கேணி இந்து தமிழ்கலவன் பாடசாலை | |
| 34 | யா/மருதன்கேணி இந்து தமிழ்கலவன் பாடசாலை | |
| 35 | யா/மருதன்கேணி இந்து தமிழ்கலவன் பாடசாலை | |
| 36 | யா/மருதன்கேணி இந்து தமிழ்கலவன் பாடசாலை | |

**வாக்கெடுப்பு பிரிவு: ஏ-சாவகச்சேரி**

| | | |
| --- | --- | --- |
| 08 | யா/மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம் | யா/நாவற்குளிம.வித்தியாலயம் |
| 32 | யா/கச்சாய் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை | யா/கொடிகாமம்திருநாவுக்கரசு ம.வித்தியாலயம். |
| 44 | யா/ மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம் | யா/வரணி மகாவித்தியாலயம். |

**வாக்கெடுப்பு பிரிவு: ஒ - நல்லூர்**

| | | |
| --- | --- | --- |
| 05 | கலைவாணி சனசமூக நிலையம், பொன்னம்பலம்வீதி அரியாலை. | யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம். |
| 21 | அரியாலை சனசமூக நிலையம், புங்கள்குளம்வீதி (ஆண் வாக்காளர்கள்) | யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் (ஆண் வாக்காளர்கள்) |
| | அரியாலை சனசமூக நிலையம், புங்கன்குளம்வீதி (பெண் வாக்காளர்கள்) | யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம். (பெண் வாக்காளர்கள்) |

**வாக்கெடுப்பு பிரிவு:-க-கிளிநொச்சி**

| | | |
| --- | --- | --- |
| 02 | கி/ கிளாலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை | கி/பளை மகாவித்தியாலயம் |
| 03 | கி/வேம்பொடுகேணி மகாவித்தியாலயம் | " |
| 06 | கி/சோரன்பற்று கணேச வித்தியாலயம் | " |
| 07 | கி/வேம்பொடுகேணி மகாவித்தியாலயம் | " |
| 08 | கி/வேம்பொடுகேணி மகாவித்தியாலயம் | " |

**தெரிவத்தாட்சி அலுவலர்,
தேர்தல் மாவட்டம் இல:10
யாழ்ப்பாணம்.**

தெரிவத்தாட்சி அலுவலரின் அலுவலகம்,
செயலகம், யாழ்ப்பாணம்,
1999-12-19.

(C-10235)


## இதோ வெளிவந்து விட்டது!!!

**பொது அறிவும் பொதுவிவேகமும்**
**(GENERAL KNOWLEDGE & APTITUDE)**

**A/L மாணவர்களுக்கும் மற்றும் சகல போட்டிப் - பரீட்சைகளுக்குமுரியது**

கிடைக்குமிடங்கள் :- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்நகர்.
சிவநெறி கல்வி நிலையம்
(ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகில்)

**கணிதம் G.C.E O/L மாணவர்களுக்கான 42ஆம், 45ஆம் இலக்க வினாத்தாள்களைக் கொண்ட கணிதப் பயிற்சி - வினா விடை விரைவில் வெளிவரும்.**

ஆக்கம் :- **பா.கிருபாகரன்**
(B.A (Cey), SP.Trd.Maths) (71855)

## விற்பனையில்!

**மிட்சுஇ சிமெந்து**

**பெற விரும்புவோர் ஓடரை உடன் பதிவு செய்க.**

**ஜெசிபா ஏஜென்ஸி**
132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2407

(சி-10259)

## MODERN LONDON STAR

**Bank View** **Chavakachcheri**

**21.12.99 இல் ஆரம்பம்**

* நகரப் புகழுடன் மற்றுமோர் கிளை நிறுவனம் மட்டுவில் தெற்கு, (வாகையடிச் சந்தி அருகில்)
    * கணனிப் பயிற்சிகள்
    * தரம் 7 முதல் O/L வரையான வகுப்புகள்
* வகுப்பொன்றிற்கு 30 அனுமதிகள் மட்டும்! இறுதியாண்டில் பல விருதுகள் வழங்கப்படும்.

**குறிப்பு:- தலைமை நிறுவன மாணவர்கள் இடம்பெயர்ந்திருப்பின் இக்கிளையுடன் தொடர்புகொள்ளவும்.**

**-இயக்குநர்**
MLS (சி-10250)


## கண்ணீர் அஞ்சலி

**எம் சக ஆசிரியரான பலாலி ஆசிரியர் கலாசாலையின் கிறீஸ்தவநெறி முதலாம் வருட மாணவி செல்வி பிரான்ஸ் சேவியர் மெக்டலின் ஸ்ரெலா (நோயர்) அவர்களின் சகோதரி திருமதி என். எஸ்.காமலின் ரெலா(சூட்டி) அவர்கள் 19.12.99 அன்று அகாலமரணமானார். பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

**ஆசிரியர் கலாசாலை
மன்னார் மாணவர்கள்
பலாலி(கோப்பாய்)**

(சி/10258)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20-12-1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.